Registered as a news paper.    பக்கங்கள்: பன்[illegible]ண்டு    விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 | திருவள்ளுவர் ஆண்டு: 2037 | தை 18 | ஹிஜ்ரி 1426 | துல்ஹஜ் 30 | (31.01.2006) | செவ்வாய்க்கிழமை | இதழ் 123

விமானம் மற்றும் கப்பல் மூலம்
உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ,பெரியதோ,
எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும் எந்தநேரமும்
குறைந்த கட்டணத்தில் அனுப்பிட
மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு
30% விசேடசலுகை
லண்டனுக்கான 5 Kg பொதிக்கு
1 Kg க்கான கட்டணம் 500/=
திருமுருகன் கொம் நெற்
259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310
36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
Tel - 021 226 4252
Fax - 021 226 4253
குகனீ தொலைத்தொடர்பகம் 166,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 22 2027
Fax - 021 226 2993

# தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்கள் ஐந்து பேர் ஆயுதக்குழுவினரால் கடத்தல்!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பிலிருந்து - வவுனியா நோக்கிப் பயணம் செய்த தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள் ஐவர் வெலிக்கந்தையில் வைத்து ஆயுதபாணிகளால் கடத்தப்பட்டனர்.

மட்டக்களப்பிலிருந்து - வவுனியாவுக்கு வாகனம் ஒன்றில் பயணித்துக்கொண்டிருந்த தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள் 15 பேரை வெலிக்கந்தைப் பகுதியில் வழிமறித்த இனந்தெரியாத ஆயுததாரிகள் அவர்களுள் 5 பேரை பலவந்தமாகக் கடத்திச்சென்றனர்.

இந்தப் பயங்கரச் சம்பவம் நேற்று நண்பகல் ஒரு மணியளவில் வெலிக்கந்தையில் உள்ள இராணுவ முகாமை அண்மித்த பகுதியில் இடம்பெற்றது.

வாகனம் ஒன்றில் வந்த ஆயுதம் தரித்த கடத்தல்காரர்கள் பணியாளர்கள் பயணித்த வாகனத்துக்குக் குறுக்காக தங்களது வாகனத்தை நிறுத்தி ஐந்து பேரையும் கடத்திச்சென்றனர்.

கடத்தப்பட்ட ஐவரும் தாம் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள்(12 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை அதிகாரிகள் 8 பேருக்கு இடமாற்றம்!

கொழும்பு —

மன்னார்ப் பிரதேசத்தின் கடற்படைக் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றிய கொமாண்டர் நிஹால் சந்திரசிறி அடுத்த மாதம் 5 ஆம் திகதி முதல் திருகோணமலைக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளார்.

கொமாண்டர் நிஹால் சந்திரசிறி தவிர மேலும் 4 கட்டளையதிகாரிகள் உட்பட 8 கடற்படை அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகக் கடற்படைத் தலைமையக வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

கொமாண்டர் டபிள்யூ.எச்.சுமணசிறி பூனாவ கடற்படை முகாமுக்கும், கொமாண்டர் ஜி.எச். எதிரிவீர ஊர்காவற்துறை கடற்படை முகாமுக்கும், கமாண்டர் கே.எல்.டி. நிஷாந்த ஊர்காவற்துறை கடற்படை முகாமுக்கும், கொமாண்டர் டபிள்யூ. எஸ்.கே.சில்வா பூனாவ முகாமின் உதவிக் கட்டளை அதிகாரிப் பயிற்சிப் பதவிக்கும், லெப்டினன்ட் கொமாண்டர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மகளை போராட்டத்துக்கு அனுப்பிய தந்தை!

கிளிநொச்சி —

விசுவமடு - மயில்வாகனபுரத்தைச் சேர்ந்த மாரிமுத்து என்பவர் - தனது மகளை தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு அனுப்பிவைத்தார்.

தனது குடும்ப அங்கத்தவர்கள் அனைவரதும் ஒருமித்த தீர்மானத்துக்கு அமைவாக நேற்று முன்தினம் விசுவமடு பிரதேச அரசியற்துறை அலுவலகத்தில் தனது மகளான மா.இராசேஸ்வரியை (வயது 18) போராட்டத்தில் இணைத்தார்.

இதன்பின்னர் கருத்துத் தெரிவித்த அவர் - எனக்கு இப்போது 56 வயதாகிறது. இந்த நாட்டில் எத்தனையோ பேச்சுவார்த்தைகள் நடந்துவிட்டன. ஆனால், எங்களுக்கு இன்னமும் நிம்மதி கிடைக்கவில்லை.

எனவே, நாங்கள் எமது தேசியத் தலைவரின் கீழ் முழுமையாக அணிதிரண்டு போராடுவதன் மூலம்தான் எமது தேசத்தை முழுமையாக மீட்க முடியும். அப்போது (12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய விமானப்படை தளபதி நேற்று கொழும்பு வருகை!



கொழும்பு —

இந்திய விமானப்படைத் தளபதி எஸ்.பி. தியாகி நேற்று கொழும்பு வந்துள்ளார். 5 நாள் பயணமாக நேற்றுமாலை 5 மணியளவில் கட்டுநாயக்க விமானத் (12 ஆம் பக்கம் பார்க்க)

# சுமுகமானநிலை உருவாகும் வரை பல்கலை பகிஷ்கரிப்பு தொடரும்!

## குடாநாட்டில் தீவிரமாகும் சோதனைக் கெடுபிடிகள்!

## மாணவர் ஒன்றியம் அறிவிப்பு

கொழும்பு —

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது இராணுவத்தினரும், இராணுவ புல

# சோதனைக் கெடுபிடிகள்!



படம்:ரொய்ட்டர்

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினர் மீண்டும் தமது சோதனைக் கெடுபிடிகளைத் தீவிரப்படுத்தி வருகின்றனர்.

யாழ்.நகரப்பகுதியிலும்மற்றும் குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் நிலைகொண்டுள்ள படையினரே பொது மக்கள் மீது சோதனைக் கெடுபிடிகளை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த சில நாட்களாக குறைந்திருந்த சோதனைக் கெடுபிடிகள் நேற்றுப் பல்வேறு இடங்களிலும் தீவிரமாக இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

வடமராட்சி நோக்கி செல்லும் வாகனங்களும் வடமராட்சியிலிருந்து வெளியேறும் வாகனங்களும் வல்லைச் சந்தியில் வைத்து கடுமையாகச் சோதனையிடப்பட்டன.

பருத்தித்துறைப் பகுதியிலும் வீதியால் பயணம் செய்யும் வாகனங்களை மறித்து படையினர் சோதனைகளை நடத்தினர். இதேவேளை யாழ். நகரப் பகுதியிலும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களை மறித்துப் படையினர் கடுமையான சோதனைகளை மேற்கொண்டனர். வாகனங்

(12 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பு —

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது இராணுவத்தினரும், இராணுவ புலனாய்வுத் துறையினரும் மேற்கொண்டுவரும் அச்சுறுத்தல்கள் நிறுத்தப்பட்டு, மாணவர்கள் அச்சமின்றி கல்விகற்பதற்கான சூழல் உருவாகும்வரை தொடர்ந்து கல்விச் செயற்பாடுகளை பகிஷ்கரிக்கப்போவதாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் பகிஷ்கரிப்புத் தொடர்பாக பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கை (12 ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க தூதரைக் கண்டித்து சேலத்தில் எழுச்சிப் போராட்டம்!

சேலம் —

ஈழத்தமிழரை மிரட்டும் வகையில் உரையாற்றிய இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரைக் கண்டித்து தமிழகத்தின் சேலம் நகரில் நேற்று எழுச்சிப் பேரணியும் கண்டன ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது.

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழுவின் சார்பில் நடத்தப்பட்ட இந்த பேரணி மற்றும் ஆர்ப்பாட்டத்துக்கு தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ மணி தலைமை வகித்தார்.

சேலம் செவ்வாய்ப்பேட்டை தீயணைப்பு நிலையத்தில் நேற்றுக் காலை 10 மணிக்கு ஈழத்தமிழரை மிரட்டும் அமெரிக்கத் தூதுவரைக் கண்டித்து பேரணி தொடங்கியது. நகரின் முக்கிய வீதிகளுக்கூடாகச் சென்ற பேரணி சேலம் போஸ் மைதானத்தை வந்தடைந்தது.

அமெரிக்கத் தூதுவரைக் கண்டித்து இந்தப் பேரணியில் முழக்கங்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)



# இருதய நோயால் பாதிக்கப்பட்ட இந்தச் சிறுவனுக்கு உதவுங்கள்!



யாழ்ப்பாணம் —

சரவணை சின்னமடு றோ.க.த.க. பாடசாலையில் தரம் 3 இல் கல்வி கற்றுவரும் நாகேஸ்வரன் சற்றாக் என்ற இந்த மாணவன் இருதய நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

தீவகப் பகுதியில் மிகவும் பின் தங்கிய கிராமத்தில் 1998 ஆம் ஆண்டு பிறந்த இந்தச் சிறுவனுக்கு மூன்று சகோதரர்களும் ஒரு சகோதரியும் உள்ளனர்.

வறுமைக் கோட்டுக்குக் கீழ் தமது அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதில்கூட இவரது குடும்பம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளது. இந்த நிலையில், இந்தச் சிறுவனுக்கு கொழும்பு அப்பலோ மருத்துவமனையில் அவசர சந்திரசிகிச்சை மேற்கொள்ளவேண்டுமென வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, கருணை உள்ளம் கொண்ட கொடையாளிகள் - மனமுவந்து பண உதவி செய்து இந்தச் சிறுவனின் எதிர்காலத்துக்கு உதவுமாறு இவரது பெற்றோர் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நிதியுதவி செய்ய விரும்புபவர்கள் இலங்கை வங்கியின் ஊர்காவற்துறை கிளையில் 40696 என்ற கணக்கிலக்கத்தில் வைப்பிலிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# ஓய்வுபெற்ற டிப்போ ஊழியர்களின் கொடுப்பனவை உடன் வழங்குக!

## அமைச்சர் பௌஸியிடம் சிவநேசன் எம்.பி. வேண்டுகோள்

யாழ்ப்பாணம் —

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையில் நீண்டகாலமாகப் பணியாற்றி ஓய்வுபெற்ற ஊழியர்களின் பணிக்கொடை, தண்டப்பணம் ஆகியவற்றை வழங்குவதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸியிடம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக போக்குவரத்து அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் நீண்டகாலமாக பிராந்திய அலுவலகத்திலும் - யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர், மன்னார் ஆகிய உப பணிமனைகளிலும் கடமையாற்றி ஓய்வுபெற்ற 38 பணியாளர்கள் 2004, 2005 ஆம் ஆண்டுகளில் ஓய்வுபெற்றபோதும் அவர்களுக்கான பணிக்கொடையும், தண்டப்பணமுமாக மொத்தம் 12,938,355 ரூபா இன்றுவரையும் வழங்கப்படவில்லை.

மிக நீண்டகாலமாகச் சேவையாற்றிய இந்தப் பணியாளர்கள் தமது முதுமைக் காலத்தில் இந்தப் பணிக்கொடையையே நம்பியிருக்கின்றனர்.

இந்தக் கொடுப்பனவு தொடர்பாக தொழில் உதவி ஆணையாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் கூட பலனளிக்கவில்லை.

மிகுந்த வாழ்க்கைச் சுமையோடு இருக்கும் இந்தப் பணியாளர்களின் நிலையைக் கவனத்தில் கொள்ளும் - தற்போது பணியிலுள்ள பணியாளர்களும் தமது எதிர்கால நிலை என்னவாகுமோ எனச் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்.

இவர்களின் கொடுப்பனவை - தாங்கள் பொறுப்பேற்றுள்ள இந்தக் காலத்தில் வழங்குவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நோயாளரின் அவசர தேவைகளுக்கான அம்புலன்ஸ் சேவை பெறும் நடைமுறை!

யாழ்ப்பாணம் —

யாழ். போதனா வைத்தியசாலையில் அவசரமானதும், அகாலமானதுமான தேவைகளுக்காக அம்புலன்ஸ் சேவையைப் பெறுவது தொடர்பான நடைமுறைகளை வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அவசரமான அழைப்புக்கு அம்புலன்ஸ் வழங்குவது தொடர்பாக அனுப்பிய செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

அவசர அழைப்புக்களின் பேரில் அம்புலன்ஸ் வண்டிகளை பொதுமக்கள் பாவனைக்குக் கோருவது தொடர்பாக குடாநாட்டுப் பத்திரிகைகளில் வெளியான செய்திக் குறிப்புகள் பற்றி யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் என்றவகையில், யதார்த்த பூர்வமான நிலையை விளக்கவேண்டியது எனது கடமையாகும்.

இரவு வேளைகளில் அகாலமானதும், அவசரமானதுமான சந்தர்ப்பங்களில் மட்டும் மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளிலிருந்து விதிவிலக்காக அழைப்புகள் கிடைக்கப்பெறும்போது பின்வரும் அடிப்படையில், இரவுக் கடமையிலிருக்கும் சிரேஷ்ட வைத்தியரால் அம்புலன்ஸை அனுப்பும் சந்தர்ப்பங்கள் எது என்பது தீர்மானிக்கப்படும்.

அகாலமானதும், அவசரபூர்வமானதாகவும் இருக்க வேண்டும். சாதாரண போக்குவரத்துச் சேவைகளைப் பயன்படுத்த முடியாத சந்தர்ப்பமாக இருத்தல் முக்கியமானது. மேற்கூறிய நிலைமைகளின் அடிப்படையில் யாழ். மாநகரசபை எல்லைக்குள் இருந்து கிடைக்கும் அழைப்புக்கள் மட்டும் கவனத்தில் கொள்ளப்படும்.

அழைப்புக்களின் நம்பகத்தன்மை கடமையிலுள்ள சிரேஷ்ட வைத்திய அதிகாரியால் உறுதிப்படுத்தப்பட்ட பின்பே தீர்மானிக்கப்படும் அம்புலன்ஸ் அழைப்புக்கள் மேற்கூறிய அடிப்படைகளில் கோரப்படும்போது வைத்தியசாலையின் அவசர தேவைகளின் முன்னுரிமை அடிப்படையில் சாத்தியப்படும்போது மட்டுமே மேற்படி அம்புலன்ஸ் பாவனைக்கு விடப்படும்.

இவ்வாறான சேவை ஒழுங்கானது, இயன்றவரை நடைமுறையில் அல்லாததும், எங்களிடமுள்ள அம்புலன்ஸ் வண்டிகள், சாரதிகள், ஆளணி வளங்களை கொண்டு முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட முடியாததுமாகும் என்பதனை பொதுமக்களின் கவனத்திற்கு சமர்ப்பிக்கிறேன் என்றும் மேற்படி அம்சங்களுக்கு அமைவாக இந்தச் சேவை கருத்திற் கொள்ளப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மகாத்மா காந்தியடிகளின் 58 ஆவது சிரார்த்த தினம்!

யாழ்ப்பாணம் —

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தியடிகளின் 58 ஆவது சிரார்த்ததினம் நேற்று யாழ்ப்பாணத்தில் சிறப்புற அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள அடிகளாரின் சிலைக்கு காலை 10.30 மணியளவில் மில்க்வைற் அதிபர் இ.தவகோபால்,ஒய்வு பெற்ற அதிபர் ஆ.வடிவேலு, சங்கத்தின் செயலாளர் க. இராசரத்தினம், கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய அதிபர் க.செல்வக்குமாரன் ஆகியோர் மலர்மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து காந்தீய அபிமானிகளும் பொதுமக்களும் மலர் அஞ்சலி செலுத்தினர். பின்னர் முதலாம் குறுக்குத் தெரிவிலுள்ள சங்க அலுவலகத்தில் சங்கத்தின் உப தலைவர் அ. இராமநாதன் தலைமையில் நினைவுக்கூட்டம் இடம்பெற்றது. நினைவுரைகளை ஓய்வு பெற்ற அதிபர் ஆ.சபாரத்தினம், ஆ.வடிவேலு, எம்.சாந்தன் சத்தியகீர்த்தி, க.செல்வக்குமாரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

# திரைப்படத்தில் நடிக்க ஆர்வமுள்ளவர்களுக்கு!

கிளிநொச்சி —

நிதர்சனம் நிறுவனம் தயாரிக்கவுள்ள திரைப்படத்தில் நடிப்பதற்கு ஆர்வமுள்ளவர்களுக்கான நடிப்புப் பயிற்சி எதிர்வரும் வியாழன், வெள்ளி ஆகிய இரு நாட்களும் காலை 10 மணிக்கு கிளிநொச்சி – திருநகரில் அமைந்துள்ள நிதர்சனம் நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ளவர்களை நிதர்சன நிறுவனத்தின் திரைப்பட உருவாக்கல் பிரிவுக்கு நேரில் வருமாறு நிதர்சனம் நிறுவனம் அறிவித்துள்ளது.

இவர்களுக்கான பயிற்சிகளை தாயகத்தின் சிறந்த இயக்குநர் வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போதனாசிரியர்கள் ஐந்து பேர் விரிவுரையாளர்களாக நியமனம்!

யாழ்ப்பாணம் —

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத்துறையில் போதனாசிரியர்களாகப் பணியாற்றிய ஐந்து பேர் - சேவை மூப்பு, கல்வித் தகைமை ஆகியவற்றின் அடிப்படையில் கடந்த வருடம் மே மாதம் 2 ஆம் திகதி முதல் விரிவுரையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

திருமதி சண்முகயோகினி இரவீந்திரன், வைரமுத்து சுந்தரேசன், மகேஸ்வரக் குருக்கள் சரவணபவஐயர் ஆகியோர் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II இற்கும் சாந்தி விக்கினராஜா, சோமசுந்தரம் ஸ்ரீகதிர்காமநாதன் ஆகிய இருவரும் விரிவுரையாளர்களாகவும் நியமனம் பெற்றுள்ளனர்.


முதலாவது பிறந்ததின வாழ்த்து

தஜரூபன்

31.01.2006



உரும்பிராயைச் சேர்ந்த உருத்திரன் - நிரஞ்சனா தம்பதிகளின் செல்வப் புதல்வன் தஜரூபன் தனது முதலாவது பிறந்ததினத்தை (31.01.2006) இன்று தம் இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பலகலைகள் பெற்று பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

கோப்பாய் றோட்,
உரும்பிராய்.
(லோகா ரியூசன் அருகாமை) [C/4055]

மனோகரா யாழ்ப்பாணம்



இளைய தளபதி விஜய், திரிஷா
(வருகிறான் வரிப்புலி நாதியாய்)
மற்றும் பலர் நடிப்பில்
ஆதி
இயக்கம் 8 ரமணா
தயாரிப்பு - S.A சந்திரசேகர் இசை -வித்தியாசாகர்
(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு)
காட்சிகள்;- 10.30, 1.30, 4.30, 7.30. (புதிய நேரம்)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)



அல்டிமேட் ஸ்ரார் அஜித்,
லைலா, விவேக்,
பிரகாஸ்ராஜ் நடித்த
பரமசிவன்
அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க நேரம் மாற்றப்பட்டுள்ளது.
காட்சிகள்;- 10.30, 2.30 (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்



சிம்பு
ஜோதிகா
பிரகாஸ்ராஜ்
நடித்த
சரவணா
இயக்கம்:
கே.எஸ்.ரவிக்குமார்.
காட்சி : பு.நே. 10.30, 2.15 மட்டும்.
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நிறைஞ்சனாஸ் சங்கானை
இன்றுமுதல்...
சத்தியராஜ் இருவேடம், சங்கவி, மற்றும் பலர் நடித்த
அய்யர் I.P.S
காட்சிகள் 11.00,2.30,5.30 (பு.நே)

சிறு விளம்பரம்

கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் பிரபல இடத்தில் நவீன சந்தைக்கு அருகாமையில் கடை வாடகைக்கு உண்டு. தொடர்பு - இல.89, சீனிவாசகம்வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.
T.P - 0776967448 (2179)

கண்ணீர் அஞ்சலி



அமரர்
இராயப்பு அந்தோணிப்பிள்ளை (அப்புச்சி)

பெரியவிளானைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இ.அந்தோணிப்பிள்ளை 26.01.2006 அன்று கனடாவில் காலமானார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல் -
யங்கென்றீசியன் விளையாட்டுக்கழகம்,
இளவாலை.
[2178]


# அரசாங்க அறிவித்தல்

## யாழ். மாவட்டச் செயலகம்

## 2006 ஆம் ஆண்டுக்கான பொருட்கள், சேவைகள் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

யாழ். மாவட்டச் செயலகத்துக்குப் பின்வரும் பொருட்களையும், சேவைகளையும் வழங்குவதற்குத் தம்மைப் பதிவுசெய்து கொள்ள விரும்பும் நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை யாழ். மாவட்டச் செயலகக் களஞ்சிய நலன்புரிக் கிளையில் 01.02.2006 தொடக்கம் அலுவலக நாட்களில் காலை 9.30 மணி தொடக்கம் பி.ப.3.45 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 15.02.2006 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் விலாசமிடப்பட்டு தபாலுறையின் இடது பக்க மூலையில் பொருட்கள், சேவைகள் வழங்குநர்களைப் பதிவுசெய்தல் எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

1. கணனி, நிழற்படபிரதி இயந்திரம், தட்டச்சு இயந்திரம், பக்ஸ் இயந்திரம் என்பன வழங்குதல், அவற்றின் உதிரிப்பாகங்களை வழங்குதல் மற்றும் அவற்றைத் திருத்தம் செய்தல்.
2. மோட்டார் வாகனங்களுக்குரிய உதிரிப்பாகங்கள் வழங்குதல் மற்றும் அவற்றைத் திருத்தம் செய்தல்.
3. காகிதாதிகள், எழுதுபொருட்கள் வழங்குதல்.
4. பாவனைப் பொருட்கள், ஈர்க்கில்தடி, தும்புத்தடி, சவர்க்காரம், விம், காபிக், பைனோல், குளோரின் முதலியன வழங்குதல்.
5. மரத் தளபாடங்கள் வழங்குதலும், திருத்தமும்.
6. உருக்குத் தளபாடங்கள் வழங்குதலும், திருத்தமும்.
7. கட்டடத் திருத்தம் செய்தல், திருத்தத்துக்குரிய பொருட்கள் வழங்குதல்.
8. பீங்கான் பொருட்கள், பிளாஸ்ரிக் பொருட்கள் என்பவற்றை வழங்குதல்.
9. மின் உபகரணங்கள், உதிரிப்பாகங்கள் வழங்குதல் மற்றும் அவற்றைத் திருத்தம் செய்தல்.
10. மின்னிணைப்புத் திருத்த வேலைகள், நீர் வழங்கு பொருட்கள் வழங்குதல் மற்றும் அவற்றைத் திருத்தம் செய்தல்.
11. இறப்பர் முத்திரைகள் செய்து வழங்குதல்.
12. சீருடைத் துணிகள் மற்றும் துணி வகைகள் வழங்குதல்.
13. மின் பிறப்பாக்கிகள், மின் மோட்டர், நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்குதலும், அவற்றின் திருத்த வேலைகளும்.

**கே.கணேஸ்**
*அரசாங்க அதிபரும், மாவட்டச் செயலாளரும்,*
*யாழ்ப்பாண மாவட்டம்.* (C/5047)

# பேச்சுவார்த்தை அறிவிப்புக்கு பின்னர் பெருமளவு வன்முறைகள் குறைந்தன

## ஹக்ரப் ஹெக்லண்ட் தெரிவிப்பு



கொழும்பு

தமிழீழ விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் ஜெனீவாவில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்ட பின்னர் குறிப்பிடத்தக்க அளவுக்கு வன்முறைகள் குறைந்து விட்டன என்று இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -


ஒரு மாதத்துக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க மாற்றம் இது. யுத்தநிறுத்த ஒப்பந்தம் முழு அளவில் நடைமுறைப்படுத்துவதற்கான சாதகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் 2002 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த பின்னர் கடந்த டிசம்பர் மாதம்தான் மோசமான வன்முறைகள் ஏற்பட்டன. நூற்றுக்கும் அதிகமான பொது மக்களும், அரச படையினரும், விடுதலைப் புலிகளும் உயிரிழந்தனர். இது யுத்தநிறுத்த ஒப்பந்தத்தையே கேள்விக்குறியாக்கியிருந்தது.

இருப்பினும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரும், இலங்கை அரசாங்கமும் ஜெனீவாவில் அடுத்த மாதம் பேச்சுக்கள் நடத்துவதாக அறிவித்த நிலையில் வன்முறைகள் முடிவுக்கு வந்துள்ளன. இது கண்காணிப்புக்குழுவினருக்கு நிம்மதி அளிக்கிறது.

கொழும்பில் கடந்த வாரம் நோர்வே சிறப்புத் தூதுவரும் அமைச்சருமான எரிக் சொல்ஹெய்மை சந்தித்தபோது யுத்த நிறுத்த அமுலாக்கம் தொடர்பான விவரங்களைக் கேட்டறிந்தார்.

அமைதி முயற்சிகளின் அடுத்த நகர்வுக்கான ஆக்கபூர்வமான நடவடிக்கையாக ஜெனீவா பேச்சுக்கள் அமையுமென்று நம்புகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (01)



கொழும்பு நகரப் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருக்கும் விசேட படைப்பிரிவினர் - வாகனங்களை வழிமறித்து சோதனையிடும் காட்சி

# எஸ்.பியை விடுவிக்கக்கோரி சத்தியாக்கிரகம்



கொழும்பு

சிறைத்தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸநாயக்கவை விடுதலை செய்யக்கோரி, அடுத்த மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் நாடு முழுவதும் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் - முதலில் கொழும்பு விகாரமாதேவி பூங்காவுக்கு அண்மையில், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

எஸ்.பி.திஸநாயக்கவை எதிர்வரும் 4 ஆம் திகதி சுதந்திர தினத்தன்று விடுதலை செய்யுமாறு கோரியே இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் இடம்பெறவிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (தே)

# கிழக்கு கடற்பரப்பில் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு

விடுதலைப் புலிகள் வன்னியிலிருந்து கிழக்குப் பகுதிக்கு ஆயுதங்களைக் கடத்தவிருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து கிழக்கு கடற்பரப்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாக கிழக்கு மாகாணத்தின் உளவுப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கிழக்கில் உள்ள விடுதலைப் புலி உறுப்பினர்கள் கடுமையான ஆயுதத் தட்டுப்பாட்டை எதிர்கொள்ள நேர்ந்தமையால் இந்தத் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக இவ்வாறு ஆயுதங்களை எடுத்துச்செல்வதற்கு திட்டமிட்டிருப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

இதன் காரணமாக ஆயுதப்படையினர் கிழக்கில் பாதுகாப்பைப் பலப்படுத்தியிருப்பதாகவும், புலிகளின் செய்திப் பரிமாற்றங்களில் இருந்து தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அந்தப் புலனாய்வு அதிகாரி மேலும் தெரிவித்தார். (தே)

# அரச சேவையிலுள்ள வெற்றிடங்களை பொதுப்பரீட்சை மூலம் நிரப்ப நடவடிக்கை

கொழும்பு

அரச சேவையில் தற்போது நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் நோக்கத்துடனும் அரச சேவையில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு வழங்கும் வகையில் இந்த வருடம் 40 பொதுப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் பரீட்சைகள் யாவும் இலங்கை பரீட்சை திணைக்களத்தால் நடத்தப்படவுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் திஸநாயக்க தெரிவித்தார்.

இலங்கை நிர்வாக சேவை, மொழிபெயர்ப்பாளர் சேவை, நூலகர் சேவை, அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, கிராம அலுவலர்கள் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை தொழில்நுட்பவியல் சேவை மற்றும் கட்டடக் கலைகள் சேவை ஆகிய எட்டுத் துறைகளிலும் இந்தப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

குறித்த துறைகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டி பரீட்சைகள், உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வுக்கான பரீட்சைகள் மற்றும் வினைத்திறனை மதிப்பீடு செய்யும் பரீட்சைகள் இந்த வருடம் ஒவ்வொரு மாதமும் நடைபெறவுள்ளன.

குறித்த துறைகளுக்கான பரீட்சை நடைபெறும் திகதிகள் மற்றும் இடங்கள் தொடர்பான விபரங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அறிவிக்கப்படும் என பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.



நீர்கொழும்பில் நேற்றுமுன்தினம் உயிரோடு கரையொதுங்கிய 30 அடி நீளமான திமிங்கலம்.

# ஐ.நா வில் ராதிகா குமாரசுவாமி

கொழும்பு

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரான ராதிகா குமாரசுவாமி ஐக்கிய நாடுகள் சபையின் சிறார் படையினர் தொடர்பான அமைப்பின் சிறப்புப் பிரதிநிதியாக நியமிக்கப்படவுள்ளார்.

ஐ.நா அமைப்பின் 3 ஆம் நிலை பொறுப்பு இதுவாகும். ஐக்கிய நாடுகள் சபையின் இணைச்செயலாளராக அவர் கருதப்படுவார்.

ஐ.நா அமைப்பில் இலங்கை சார்பில் காமினி கொரெய, ஜயந்த தனபால, அன்ட்ரூ ஜோசப் ஆகியோர் பொறுப்பு வகித்துள்ளனர். இனப்பிரச்சினைகளுக்கான சர்வதேச மையத்தின் தலைவராகவும் ராதிகா குமாரசுவாமி பணியாற்றுகிறார்.

# காலிமுகத் திடலிலேயே சுதந்திர தின நிகழ்வுகள்

கொழும்பு

இலங்கையின் 58 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் எதிர்வரும் 4 ஆம் திகதி காலிமுகத்திடலில் நடைபெறவுள்ளன.

புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளும் முதலாவது சுதந்திர நிகழ்வு அவரது தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள்வர்.

சுதந்திரதின நிகழ்வை முன்னிட்டு எதிர்வரும் நான்காம் திகதி காலி முகத்திடல் வீதி பெப்ரவரி முதலாம் திகதி முதல் போக்குவரத்துக்கு தடைவிதிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சுதந்திர தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 6 மணிக்கு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் சர்வமதப் பிரார்த்தனைகள் நடைபெறவுள்ளன.

அன்றைய தினம் காலை 11 மணிக்கு கடற்படைத் தலைமையகத்தில் இருந்து மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (01)

# கொழும்பு குண்டுவெடிப்புகள்; தீவிர விசாரணைகள் ஆரம்பம்!

கொழும்பு

கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புகளின் பின்னணி குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


இந்தக் குண்டுவெடிப்புகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென இராணுவத்தினரும், பொலிஸாரும் தெரிவித்துள்ள நிலையில் - ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் ஒருவர் மீது சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குண்டு வெடிப்பில் ஆயுத வியாபாரி ஒருவர் ஈடுபட்டிருப்பதாகவும், அவர் தற்போது சிங்கள மொழியில் வெளியீட்டுத் தொழில் செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து இந்தச் சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணைகளை நடத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார். அடுத்த சில நாட்களில் கொழும்பு குண்டுவெடிப்பு சூத்திரதாரி கைது செய்யப்படக்கூடும் என பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. (01)

# திருமலையில் புலிகளுடன் முஸ்லிம் பிரதிநிதிகள் சந்திப்பு





மூதூர்

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் மூதூரிலுள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு திருகோணமலை மாவட்ட யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் - விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முஸ்லிம்கள் தரப்பில் மூதூர் ஜின்னா நகர், அசாத் நகர், பாரதிபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (04)

# உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இ.தொ.கா, ம.ம.மு இணைவு!

கொழும்பு


உள்ளூராட்சித் தேர்தலுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்ட நிலையில் - இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் - மலையக மக்கள் முன்னணியும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளன.

இந்தத் தேர்தலில் ஒற்றுமையுடன் இரு கட்சிகளும் செயற்படவேண்டும் என்ற நோக்கிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உப தலைவர் ஆர். யோகராஜன் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் ஆறுமுகம் தொண்டமான், பெரியசாமி சந்திரசேகரன் உள்ளிட்ட அறுவர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், தேர்தலில் இணைவது தொடர்பாக இந்தக் குழு பேச்சுக்களை நடத்தும் எனவும் அவர் தெரிவித்தார். (01)

## கராச்சி டெஸ்ட் போட்டி

# வலுவான நிலையை நோக்கி பாகிஸ்தான் முன்னேற்றம்



கராச்சி —

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே கராச்சியில் நடைபெறும் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டத்தில் இந்திய அணி தனது முதல் இனிங்ஸில் சகலவிக்கெட்டுக்களையும் இழந்து 238 ஓட்டங்களைப் பெற்றதுடன், பாகிஸ்தான் அணி தனது இரண்டாவது இனிங்ஸில் இரண்டு விக்கெட் இழப்புக்கு 173 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இந்திய அணி தனது முதல் இனிங்ஸில் 4 விக்கெட்டுக்களை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆடுகளத்தில் யுவராஜ் சிங் 7 ஓட்டங்களுடனும், கங்கூலி 9 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

நேற்றையதினம் இருவரும் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். இருவரும் நிதானமாக ஆடி ஓட்டங்களைப் பெற்றனர். இதனால் ஸ்கோர் மெது மெதுவாகவே உயர்ந்தது. இந்த நிலையில் அணியின் ஸ்கோர் 137ஆக இருந்தபோது - 53 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 34 ஓட்டங்களைப் பெற்றிருந்த கங்கூலி, அப்துல் ரசாக்கின் பந்துவீச்சில் அசீப்பிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து பலத்த எதிர்பார்ப்புடன் டோனி களமிறங்கினார். ஆனால் அணி மேலதிகமாக 28 ஓட்டங்களைப் பெற்றநிலையில், 74 பந்துகளில் 8 பவுண்டரிகள் அடங்கலாக 45 ஓட்டங்களைப் பெற்றிருந்த யுவராஜ் சிங்-மொகமட் அசீப்பின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ ஆனார். அவரைத் தொடர்ந்து அணி மேலதிகமாக ஓட்டமெதையும் பெறாத நிலையில் - அப்துல் ரசாக்கின் பந்துவீச்சில் கம்ரன் அக்மலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அவர் 3 பவுண்டரிகள் அடங்கலாக 13 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இதனைத் தொடர்ந்து பதான் - கும்ளே ஜோடி சேர்ந்தனர். பதான் சிறப்பாக ஆடினாலும், மறுமுனையில் நின்ற கும்ளே பந்துகளை வீணடித்துக் கொண்டு நின்றார். அவர் அணியின் ஸ்கோர் 181ஆக இருக்கும்போது - 7 ஓட்டங்களுடன் சொகைப் அக்தரின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ ஆனார்.



அடுத்து பதானுடன் சகீர்கான் ஜோடி சேர்ந்தார். இருவரும் நிதானமாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். இந்த நிலையில் அணி 237 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில்- சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த பதான், 51 பந்துகளில் 6 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 40 ஓட்டங்களைப் பெற்றநிலையில், அப்ரிடியின் பந்துவீச்சில் மொகமட் யூசுப்பிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து கடைசி விக்கெட்டாக சகீர்கானுடன் ஆர்.பி.சிங் இணைந்தார். ஆனால் அணி மேலதிகமாக ஒரு ஓட்டத்தைப் பெற்றநிலையில் சகீர்கான் மொகம் அசீப்பின் பந்துவீச்சில் கம்ரன் அக்மலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இவர் 2 பவுண்டரிகள் அடங்கலாக 21 ஓட்டங்களைப் பெற்றார். இதனால் இந்திய அணி தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 238 ஓட்டங்களைப் பெற்றது. ஆர்.பி.சிங் ஓட்டமெதையும் பெறாதநிலையில் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் மொகமட் அசீப் 4, அப்துல் ரசாக் 3, சொகைப் அக்தர் 2, சகிட் அப்ரிடி 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

அடுத்து தனது இரண்டாவது இனிஸ்ஸை ஆட பாகிஸ்தான் களமிறங்கியது. ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக சல்மான் பட்டும், இம்ரான் பர்கத்தும் களமிறங்கினர். இருவரும் நிதானமாக ஆடி முதல் இனிங்ஸில் தாம் விட்ட தவறை நிவர்த்தி செய்தனர்.



இவர்கள் இருவரும் முதலாம் விக்கெட்டுக்காக 109 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் - கங்கூலியின் பந்துவீச்சில் சல்மான் பட் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். இவர் 74 பந்துகளில் 10 பவுண்டரிகள் அடங்கலாக 53 ஓட்டங்களைப் பெற்றார்.



அடுத்து பர்கத்துடன் யுனுஸ்கான் ஜோடி சேர்ந்தார். இந்த நிலையில் அணியின் ஸ்கோர் 122 ஆக இருக்கும்போது 10 பவுண்டரிகள் அடங்கலாக 57 ஓட்டங்களைப் பெற்றிருந்த பர்கத் - பதானின் பந்துவீச்சில் டெண்டுல்கரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதனைத் தொடர்ந்து யுனுஸ்கானுடன் மொகமட் யூசுப் ஜோடி சேர்ந்தார். இருவரும் சிறப்பாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். இந்த நிலையில் நேற்றைய ஆட்டம் முடிவுக்கு வந்தது. ஆட்டநேரமுடிவில் பாகிஸ்தான் அணி 2 விக்கெட் இழப்புக்கு 173 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. யுனுஸ்கான் 5 பவுண்டரிகள் அடங்கலாக 25 ஓட்டங்களுடனும், மொகமட் யூசுப் 5 பவுண்டரிகள் அடங்கலாக 30 ஓட்டங்களுடனும் ஆடுகளத்தில் உள்ளனர்.

## பெடரர் சம்பியனானார்



மெல்பேர்ன் —

அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் சம்பியன் பட்டத்தை சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர் கைப்பற்றினார்.

ஆண்களுக்கான ஒற்றையர் இறுதியாட்டம் மெல்பேர்னில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதில் முன்னாள் சம்பியனான சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரரை எதிர்த்து சைபிரஸைச் சேர்ந்த 20 வயது வீரர் மார்கஸ் பாக்ததிஸ் மோதி னார். முடிவில் 5-7, 7-5, 6-0, 6-2 என்ற செட் கணக்கில் பெடரர் வெற்றி பெற்றார்.

தரநிலையில் இடம்பெறாத பாக்ததிஸ் இறுதிச் சுற்றுக்கு முன்னேறியதால், உலக ரெனிஸ் வட்டாரத்தில் இறுதியாட்டம் மிகவும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது.

அதனை நிரூபிக்கும் விதமாக முதல் செட்டை 7-5 என கைப்பற்றி, முன்னாள் சம்பியன் பெடருக்கு அதிர்ச்சியளித்தார் பாக்ததிஸ். ஆனால், அதன்பின்பு அவரது ஆட்டம் எடுபடவில்லை. அடுத்த 3 செட்களையும் தொடர்ந்து வென்று பட்டத்தைக் கைப்பற்றினார் பெடரர். அவர் தொடர்ந்து கைப்பற்றும் 3ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் இதுவாகும்.

கடைசியாக, 1993-94இல் அமெரிக்காவின் பீட் சாம்பிராஸ் தொடர்ந்து 3 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் பட்டங்களை வென்றிருந்தார். அவருக்குப் பின்னர் அந்தச் சிறப்பை பெடரர் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மொத்தத்தில் 7 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார் அவர்.

## அவுஸ்ரேலியாவுக்கான பயணங்களை பகிஷ்கரிப்பது தொடர்பாக ஆலோசனை

கேப்ரவுண் —

அவுஸ்ரேலியாவுக்கான பயணங்களை பகிஷ்கரிப்பது தொடர்பாக தென்னாபிரிக்க அணி ஆலோசனை நடத்தவிருப்பதாக உள்ளூர் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது அவுஸ்ரேலியாவில் நடைபெற்றுவரும் வி.பி கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்க வீரர்களுக்கு எதிராக இனவாத கருத்துக்கள் முன்வைக்கப்படுவதையடுத்தே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இது குறித்து தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி கிரால்ட் மஜோரா டர்பனில் இருந்து வெளியாகும் த மேக்குரி என்ற பத்திரிகைக்கு பேட்டியளிக்கையில் -

இது மிகவும் பாரதூரமானது. இத்தகைய நிலை தொடருமேயானால், மீண்டும் நாம் இங்கு விளையாட வருவது குறித்து தீவிரமாக ஆலோசிக்க நேரிடுமெனத் தெரிவித்தார்.

பேர்த்தில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியின்போது மக்காயா என்ரினி, கானட் குருனர், ஹேர்ஷல் கிப்ஸ், அஸ்வெல் பிறின்ஸ் போன்ற கறுப்பின வீரர்கள் - அவுஸ்ரேலிய ரசிகர்களால் இனவெறி நோக்கில் தூஷிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சம்பியன் கிண்ண கிரிக்கெட்

# மும்பை, புதுடெல்கி மைதானங்களில் போட்டிகள் நடத்துவதில் சிக்கல்!



மும்பை —

புதுடெல்கி, மும்பை மைதானங்களில் சம்பியன் கிண்ண கிரிக்கெட் போட்டிகளை நடத்துவதில் சிக்கல்கள் தோன்றியிருக்கின்றன.

சம்பியன் கிண்ண கிரிக்கெட் போட்டி எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ளது. இதில் 9 நாடுகள் பங்கேற்கின்றன.

இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு மைதானங்களில் போட்டியை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் டெல்கி, மும்பை மைதானங்களும் அடங்கும்.

ஆனால் டெல்கி, மும்பை மைதானங்களில் போட்டியை நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்த இரு மைதானங்களிலும் எந்தப் போட்டிகள் நடந்தாலும் அங்கு விளம்பரம் செய்யும் உரிமைகள் சில நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி டெல்கி மைதானத்தை ஐ.டி.சி.சிகரெட் நிறுவனமும், மும்பை மைதானத்தை டாட்டா நிறுவனமும் ஒப்பந்தம் செய்துள்ளன.

ஆனால், சர்வதேச கிரிக்கெட் சங்கம்- தான் நடத்தும் உலகக் கிண்ண மற்றும் சம்பியன் கிண்ணப் போட்டிகளை ஸ்பொன்சர் செய்ய குளோபல் கிரிக்கெட் கோப்பரேசனுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

டெல்கி, மும்பை மைதானங்கள் ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதால் சம்பியன் போட்டியை அங்கு நடத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

விளையாட்டு

இது சம்பந்தமாக இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் சரத்பவார் சர்வதேச கிரிக்கெட் சங்கத் தலைமை நிர்வாகி மல்கம் ஸ்பீட்டுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். ஆனால், இதுவரை எந்த முடிவும் எட்டப்படவில்லை.

இதுபற்றி மல்கம் ஸ்பீட் கூறும்போது -

இரு மைதானங்களையும் முழுமையாக ஒப்படைத்தால்தான் அங்கு நாங்கள் போட்டியை நடத்தமுடியும்.



இல்லையென்றால் வேறு மைதானத்தில் போட்டியை நடத்துவோம் என்று கூறினார்.

சரத்பவார் கூறும்போது -

இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வு பேச்சுவார்த்தை மூலம் காண்போம். இரு மைதானங்களிலும் நிச்சயம் போட்டி நடத்தப்படும் என்றார்.

இரு மைதானங்களிலும் போட்டி நடக்காவிட்டால் அதற்குப் பதிலாக அங்கு நடக்கும் போட்டிகள் சென்னை, ஹைதராபாத், மொஹாலி, நாக்பூர், ஜெய்ப்பூர், பரோடா, கொல்கத்தா ஆகியவற்றில் ஏதாவது இரு மைதானங்களில் நடைபெறும்.

## வி.பி கிண்ணத் தொடர்



இன்றைய போட்டி

இலங்கை எதிர் தென்னாபிரிக்கா



# அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் கடற்படையினர் சோதனைக் கெடுபிடி

அல்லைப்பிட்டி —

அல்லைப்பிட்டியில் சோதனைச் சாவடி ஊடாக பயணம் செய்யும் பொதுமக்களை கடற்படையினர் கடுமையாக சோதனைக்குட்படுத்தி வருவதுடன், இளைஞர்களை தாக்கியும் வருகின்றனர். இதனால் அந்தப் பாதையூடாகப் பயணம் செய்யும் மக்கள் பீதியுடனேயே சென்று வருகின்றனர்.

இந்தச் சோதனைச் சாவடியூடாக பயணம் செய்யும் பயணிகள் அனைவரும் வாகனத்தை விட்டு இறக்கப்பட்டு, நீண்டதூரம் நடந்து சென்று உடைமைகள் மற்றும் உடற் சோதனைகளை செய்யவேண்டியுள்ளது. அத்துடன் பெண்களது உடைமைகளை ஆண் கடற்படைச் சிப்பாய்களே இந்தப் பகுதியில் வைத்து சோதனை செய்வதுடன் பெண்கள் மீது பாலியல் சேட்டைகளில் ஈடுபட்டும் வருகின்றனர்.

இதேவேளை இந்தப் பகுதியூடாக செல்லும் மோட்டார் சைக்கிள்களின் சீற்றுக்கள் மற்றும் கவர்கள் கழற்றப்பட்டு கடுமையாக சோதனையிடப்பட்டும் வருகிறது. இவ்வாறான செயற்பாடுகளால் அந்தப் பகுதியியூடாக பயணிக்கும் மக்களும், அலுவலர்களும் பெரும் நேரவிரயத்தையும், அசௌகரியங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

அரசும் - விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சூழ்நிலையில் - கடற்படையினர் மேற்கொண்டு வரும் இத்தகைய நடவடிக்கை பொதுமக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (113)

# புலனற்றோருக்கு அடையாள அட்டை

யாழ்ப்பாணம் —

புலன் பாதிப்புகளை மற்றவர்கள் இனங்கண்டு உதவ முடியாத - வாய்பேச முடியாத, செவிப்புலனற்றோருக்கு சமூகசேவைத் திணைக்களத்தால் அவர்களின் தேவைக்கு சமூகத்தில் முன்னுரிமை வழங்கும் நோக்குடன் விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கோப்பாய் பிரதேசத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தமது மூன்று முத் திரையளவு புகைப்படத்துடன் சமூகசேவை உத்தியோகத்தரை நாடி அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய பிரதேசங்களில் உள்ள பாதிக்கப்பட்டவர்களும் தமது பிரதேச சமூக சேவை உத்தியோகத்தர் ஊடாக விண்ணப்பிக்க முடியும். (90)




*வடமராட்சி லயன்ஸ் கழகத்துக்கு - லயன்ஸ்கழக பிராந்தியத் தலைவர் லயன் எஸ். சொக்கலிங்கம் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு வந்தபோது, மங்கள விளக்கேற்றி வைபவத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் - வடமராட்சி லயன் கழகத் தலைவர் லயன்ஸ்.வி.சிவகுமார், செயலாளர் லயன்ஸ் எஸ்.துரை சிங்கம், லயன்ஸ் எஸ்.தணிகாசலம் ஆகியோர் அருகில் காணப் படுகின்றனர் (12)*

# கலாசார அலுவலர் இன்மையால் கலைகளை வளர்ப்பதில் சிரமம்

நெடுந்தீவு —

நெடுந்தீவு பிரதேசத்துக்கென கலாசார அலுவலர் ஒருவர் நியமிக்கப்படாமையால், கலைஞர்கள் தமது பாரம்பரிய கலைகளை வளர்ப்பதிலும், தமக்குரிய விடயங்களைப் பெற்றுக் கொள்ளமுடியாமலும் உள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு பட்டதாரிகள் நியமனத்தின் போது - குறித்த அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்ட போதும், அவர் தற்போது இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதாலேயே இந்த நிலையேற்பட்டுள்ளது.

இதேவேளை தற்போது கலைஞர்களது விபரங்கள் ஏனைய பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்களூடாக சேகரிக்கப்பட்டு வருகின்ற போதும், நெடுந்தீவுப் பிரதேசத்தில் உள்ள கலைஞர்களது ஆவணப்படுத்தல் தொடர்பான பதிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையிலேயே இதுவிடயமாக கலைஞர்கள் மத்தியில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தகதாகும். (113)

# தென்னிந்திய வியாபாரிகள் குடாநாட்டை விட்டு வெளியேற்றம்

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டில் புடைவை விற்பனையில் ஈடுபட்டிருந்த தென்னிந்திய வியாபாரிகள் அனைவரும் குடாநாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்பு தென்னிந்தியாவில் இருந்து வருகைதந்த பெருமளவான புடைவை வியாபாரிகள் குடாநாட்டில் வியாபாரத் தில் ஈடுபட்டு வந்தனர். அண்மைக் காலமாக குடாநாட்டில் ஏற்பட்டிருந்த அசாதாரண சூழ்நிலைகளால் இந்த வியாபாரிகள் வெளியேறிச் சென்றதாக இவர்கள் தங்கியிருந்த விடுதிகளின் உரிமையாளர்கள் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்.நகரப் பகுதியில் சீனா, கொரியா மற்றும் தாய்வான் போன்ற நாடுகளிலிருந்து வருகைதந்த வியாபாரிகளின் வியாபார நடவடிக்கைகளை கட்டியுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது. (14)

# வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி

தெல்லிப்பளை —

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் கனிஷ்ட,சிரேஷ்ட பிரிவின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று காலை 9.00 மணிக்கு அதிபர் பொ.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவுக்கு பிரதம விருந்தினராக தெல்லிப்பளை கல்விக்கோட்ட கல்விப் பணிப்பாளர் கைலாசநாதனும், சிறப்பு விருந்தினராக முன்னாள் ஆசிரியர் செல்வராஜாவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (72)

# சிறுவன் படுகாயம்

யாழ்ப்பாணம் —

மோட்டார் சைக்கிள் மோதி சிறுவன் ஒருவன் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று காலை 10 மணியளவில் ஆடியபாதம் வீதி திருநெல்வேலியில் நடைபெற்ற இந்த சம்பவத்தில் கொழும்பைச் சேர்ந்த கிறிஸ்தோப்பர் யூடா (வயது 6) என்ற சிறுவனே படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் உள்ள உறவினர் ஒருவரின் திருமணத்துக்குக் கொழும்பில் இருந்து சிறுவன் தனது குடும்பத்தினருடன் வந்ததாகவும், இவர் வீதியைக்கடக்க முற்பட்டவேளை மோட்டார் சைக்கிள் மோதியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# 5 தமிழக மீனவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு!

ஊர்காவற்துறை —

குண்டுகளை வெடிக்க வைப்பதற்குப் பயன்படுத்தப்படும் டெற்றனேற்றர்களை வைத்திருந்த ஐந்து இந்திய மீனவர்களை எதிர்வரும் 10ஆம் திகதி வரைவிளக்க மறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு கச்சதீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்களின் மீன்பிடிப் படகை சோதனையிட்டபோது, அதனுள் 38 பெட்டிகளில் டெற்றனேற்றர்கள் இருப்பதைக் கண்டுபிடித்த கடற்படையினர் - படகையும், பொருட்களையும் பறிமுதல் செய்ததோடு 5 இந்திய மீனவர்களையும் கைதுசெய்தனர்.

கைது செய்யப்பட்ட ஐந்து மீனவர்களும் ஊர்காவற்துறை பொலிஸிடம்ஒப்படைக்கப்பட்டு, பின்னர் ஊர்காவற்துறை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தவேளை - பிரஸ்தாப நபர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# வாகன உரிமங்கள் விநியோகம்

நெடுந்தீவு —

நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான 2006 ஆம் ஆண்டுக்குரிய வாகன உரிமங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரைக்கும் பெற்றுக்கொள்ளாத வாகன உரிமையாளர்கள் தமது வாகனங்களுக்குரிய உரிமங்களை பெற்றுக்கொள்ளுமாறு செயலக அதிகாரி தெரிவித்தார். உரிமம் பெற வரும்போது தமது தேசிய அடையாள அட்டையையும் உடன் எடுத்து வருமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட வாகனங்களுக்கான வாகன உரிமத் தகடுகள் வழங்கப்பட்டுவருவதுடன், அவற்றை உரிய காலப்பகுதிகளில் பெற்றுக் கொள்ளுமாறும் பிரதேச வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை அலுவலகத்தில் வந்து உரிமங்களைப் பெற்றுக் கொள்ள முடியாத துவிச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கென வேலணை பங்களாவடி சந்திப் பகுதியில் வைத்து அலுவலர்களால் உடனடியாகப் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு உரிமம் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (113)


# மிதி பலகையில் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள்

யாழ்ப்பாணம் —

யாழ்.நகரப்பகுதி பிரபல பாடசாலைகளின் மாணவர்களை ஏற்றிச்செல்லும் பாடசாலை சேவை தனியார் பஸ்களில் மாணவர்கள் மிதிபலகையில் நின்றபடி பயணிப்பதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

யாழ்.நகரப்பகுதி பாடசாலைகளின் மாணவர்களை ஏற்றிச் செல்லும் சிற்றூர்களில் மிதிபலகையில் தொங்கிக்கொண்டும் பயணிப்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

காங்கேசன்துறை வீதி, யாழ்.பிரதான வீதி உட்பட யாழ்.நகரின் பிரதான வீதிகளில் இவ்வாறு மாணவர்கள் பயணிப்பதால், விபத்துக்கள் ஏற்படும் சாத்தியங்கள் உருவாகின்றன. எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)



*புதிய பிரான்சிஸ்கன் மாகாண உதவித் தலைவர் அருட் சகோதரர் தொபிதாஸின் வெள்ளிவிழா நிகழ்வில் - பொன்னாடை போர்த்தி கௌரவித்த ஊர்காவற்துறை சென்.அன்ரனிஸ் கல்லூரி அதிபர் அருட்பணி யேசுதாசனுடன், அருட்பணி நோயன் அடிகளார், ஆசிரியர்கள், மாணவர்கள் கூடியிருப்பதைப் படத்தில் காணலாம்.*

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

## அகவை ஏழு



பெயர் : த.கேசிதா

முகவரி : உடுவில்.

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ----------

முகவரி : ----------

பிறந்த ஆண்டு: ----------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------

பெற்றோர் ஒப்பம்

# மின் விநியோகப் பணிகள் துரிதம்

நெடுந்தீவு

நெடுந்தீவு மேற்கு பகுதிகளில் மின்சார விஸ்தரிப்பு பணிகள் பெருமெடுப்புடன் மேற்கொள்ளப்படுவதனால், அந்தப் பகுதிமக்கள் விரைவில் தமக்கான மின்சாரம் கிடைக்குமென்ற எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

கடந்த இருவருடங்களுக்கு முன்பே நிதி ஒதுக்கப்பட்டும் வேலைகள் மேற்கொள்ளப்படாமல் இருந்த போதும், கடந்த வருட இறுதிப் பகுதியிலிருந்து வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதேவேளை நெடுந்தீவு மத்தி, கிழக்கு பகுதிகளுக்கான மின் விஸ்தரிப்பு பணிகளும் மேற்குப் பகுதிகளுக்கான வேலையுடன் சேர்த்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மணவாளக்கோல விழா

அளவெட்டி —

அளவெட்டி கணேஸ்வரம் ஆலய மணவாளக்கோல விழா நாளை மறுதினம் காலை 8 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து விசேட பூசை, வசந்தமண்டபப்பூசை, திருவூஞ்சல் என்பன இடம்பெற்று விநாயகப்பெருமான் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். தொடர்ந்து மகேஸ்வர பூசை இடம் பெறும்.

# விளையாட்டு அதிகாரி நியமிக்க நெடுந்தீவு மக்கள் கோரிக்கை

நெடுந்தீவு —


நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்கென விளையாட்டு உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்குமாறு அந்தப் பகுதி விளையாட்டு வீரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பிரிவுக்கென நியமிக்கப்பட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வேறு பதவிக்கு மாற்றம் பெற்றுச் சென்றுள்ள போதும், இதுவரைக்கும் அவருக்குப் பதிலாக எவரும் நியமிக்கப்படவில்லை.

இதேவேளை 2006ஆம் ஆண்டுக்கான பிரதேச மட்ட விளையாட்டுக்கள் தொடர்பான ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் பயிற்சிகள் என்பன இதுவரைக்கும் ஆரம்பிக்கப்படாமையால் ஆர்வலர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. நெடுந்தீவுப் பகுதி விளையாட்டு வீரர்களின் நலன்கருதி விளையாட்டு அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (113)



# மனிதனால் மிரண்ட திமிங்கலங்கள்



அண்மையில் லண் டனில் தேம்ஸ் நதியினுள் நுழைந்து திணறிய திமிங் கலங்கள் பற்றிய செய்திகள் பலரையும் ஆச்சரியத்துக்குள்ளாக் கியது. எனினும் Bottlenose எனப்படும் இந்தத் திமிங்கலங்கள் பிரிட் டனின் மேற்கு கரை கடல் பகுதியில் சாதாரணமாக உலாவருபவை என்கிறார் திமிங் கலங்கள் மற்றும் டொல்பின் பாதுகாப்பு சங்கத்தை சேர்ந்த [illegible]ண்டஸ். ஆனாலும், இவை எவ்வாறு வழி தவறி தேம்ஸ் நதிக்குள் நுழைந்தன என்பதே தற்போது ஆராயப்படுகிறது. மனிதனால் இந்தப் பகுதி கடலில் மேற் கொள்ளப்பட்ட சூழல் மாசடைவு தொழிற்பாட்டால்தான் இவை திணறியடித்து தேம்ஸ் நதிக்குள் நுழைந்திருக்கலாம் எனப் பலரும் கருதுகின்றனர். காட்டுக்குள் டாங்கியைக் கொண்டு சென்றால், அங்குள்ள அணில்களே திணறியடித்து வீட்டுக்குள் வரும். அது போலத்தான் கடலிலும் இவ்வாறான நடவடிக்கைகள் நடந்திருக்கலாம் என்கின்றார் சிமண்ட்ஸ்.

# துருக்கி பறவைக்காய்ச்சல்




ஐரோப்பாவின் நோயாளி என அழைக்கப்படும் துருக்கியில் பரவியுள்ள பறவைக் காய்ச்சல் நோய் ஏனைய ஐரோப்பிய நாடு களுக்கும் பரவலாம் என ஐ.நா வின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் எச்சரித் துள்ளது.

பறவைக்காய்ச்சல் நோய் பரவல் அச்சம் காரணமாக இதுவரை துருக்கியில் 300,000 பறவைகள் கூட்டமாக கொல்லப்பட்டுள்ளன. துருக்கியில் இருவர் H5N1வைரஸினால் மரணமாகியுள்ளனர். 13 பேர் வைத்தியசாலையில் உள்ளனர். எனினும், தொடர்ந்து கிழக்காசியாவே பறவைக் காய்ச்சல் தாக்குதல் அச்சுறுத்தலில் உள்ளது.

# அணுப்பலம் ஈரானுக்கு இப்போதைக்கு இல்லை

அணு உலைகளை மீளவும் ஈரான் இயக்க ஆரம்பித்து அதிர்ச்சியை ஏற்படுத்தினாலும், அந்த நாட்டினால் ஓர் அணு குண்டை உடனடியாக தயாரிக்கும் அளவுக்கு வலு இல்லை என அணுசக்தி நிபுணர்கள் கூறியுள்ளனர். அணுக்குண்டை இருவழியால் உற்பத்தி செய்ய முடியும்.



யுரோனியத்தை வலுவூட்டியோ அல்லது புளூட்டேனியத்தை வேறாக்கியோ அணுகுண்டை உருவாக்க முடியும். இதில் எதை ஈரான் நாடும் என்பது இதுவரை அறியப்படவில்லை. யூரேனியத்தை சுத்திகரிக்கும் முதல்படியை தற்போது ஈரான் ஆரம்பித்துள்ளது. இத்தகைய நடவடிக்கைகளால் ஈரான்மீதான பொருளாதாரத் தடையை ஐ.நா அமுல் செய்ய திட்டமிட்டுவருகிறது. 2014 வரை ஈரான் அணு ஆயுத நாடாக மாறும் சாத்தியம் இல்லை என சர்வதேச போர் ஆய்வு நிறுவனம் ஒன்று கூறுகின்றது.

# செல்லிடப் பேசியால் மூளையில் பாதிப்பா?

செல்லிடத் தொலைபேசியை அதிகமாக பாவிப்பதால் மூளையில் கட்டிகள் (Brain tamour) வரும் என்ற கருத்து தவறானது என பிரிட்டனில் மேற்கொண்ட ஓர் பரந்த ஆய்வு கூறுகிறது



பிரிட்டனில் 2782 பேரிடம் இந்த ஆய்வு மேற் கொள்ளப்பட்டது. செல்லிடத் தொலை பேசிகளை (Mobiles) எந்தப் பகுதியில் அதிகம் வைத்து உரை யாடுகின்றோமோ அந்தப் பகுதியில் மூளையில் கட்டிகள் தோன்றும் என அண்மைக்காலமாக எச்சரிக்கப்பட்டு வந்தது. ஆனால், glioma என இந்த மூளைக்கட்டி நோய்க்கும் செல்லிடத் தொலைபேசி பாவனைக்கும் எந்த தொடர்பும் இல்லை என தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அநேகமானோர் செல்லிட தொலைபேசியை பாவிக்கும் பகுதியிலேயே புற்றுநோய்க் கட்டிகள் ஏற்படுவதாக முறையிடுவது வழமை எனப் பிரிட்டிஷ் மருத்துவ சஞ்சிகை ஒன்று கூறுகிறது. எனினும், தற்போதைய ஆய்வில் இது தவறான கருத்து என்பது புலப்படுவதாக ஆய்வை மேற்கொண்ட இன்ரபோன் என்ற அமைப்பு கூறுகிறது.

# கலிலியோவிலிருந்து முதல் சமிக்ஞை

ஐரோப்பிய விண்வெளி கழகத்தால் அனுப்பப்பட்ட கலிலியோ செய்மதியில் இருந்து முதலாவது சமிக்ஞை பிரிட்டன் மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகளில் உள்ள கட்டுப்பாட்டு நிலையங்களுக்கு கிடைத்துள்ளது. பிரிட்ட னால் கட்டப்பட்ட இந்த செய்மதி கடந்த டிசம்பர் 28 ஆம் திகதி விண் ணுக்கு அனுப்பப்பட்டது.



செய்மதி ஊடான தகவல் தொடர்புகளுக்காக (G.P.S ) இந்த செய்மதி அனுப்பப்பட்டுள்ளது. இந்தச் செய்மதி 23 ஆயி ரம் கிலோ மீற்றருக்கு அப்பால் விண்வெளியில் நிறுத்தப்பட்டுள்ளது. இந்தச் செய்மதியூடான தகவல் தொடர்பாடல் ஒப்பந்தத்தில் சீனா, இஸ்ரேல், உக்ரேன் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளும் கைச்சாத்திட்டுள்ளன.

# தானிய எரிபொருள்



சே (Say) எனப்படும் ஒரு வகை தானியத்திலிருந்து இதுவரை மதுபானமே (whisky) தயாரிக்கப்பட்டு வந்தது. தற்போது இந்தத் தானியத்திலிருந்து பெறப்படும் பயோ இதனோல் (bioethanol) வாகனங்களுக்கு எரிபொருளாகவும் உபயோகிக்க முடியும் என்பது தெரிய வந்துள்ளது. இத்தகைய தானிய எரிபொருள் சுற்றுச்சூழலைப் பாதிக்காது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு பகுதியைக் குடிக்கலாம் எஞ்சியதை வாகனத்துக்கு விடலாம் என்கிறார் தானிய எரிபொருள் உற்பத்தி நிலையத்தைச் சேர்ந்த ஹில்டன்.

ஏற்கனவே இந்த எரிபொருள் பந்தயக்கார் ஓட்ட வீரர்களால் (Racing drivers) பாவிக்கப்படுகிறது. தானிய எரிபொருள் தற்போதைய பெற்றோலிலும் விட அதிக வலுவுடையதாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# தேம்ஸ் திமிங்கலம் ஆய்வில்



கடந்த வாரம் லண்டன் தேம்ஸ் நதிக்குள் நுழைந்து இறந்த திமிங்கலத்தின் உடல் தற்போது பிரேத பரிசோதனைக்குட்படுத்தப் பட்டுள்ளது. 5 மீற்றர் நீளமான இந்தப் போத்தல் மூக்கு திமிங்கலத்தை **(Bottlenose Whale)** மீண்டும் கடலுக்குள் விரட்ட எடுத்த 7மணிநேர முயற்சி வீணானதைத் தொடர்ந்து அது மரணித்தது. சுவாசித்தலிலும் அந்தத் திமிங்கலம் சிரமப்பட்டதாக கூறப்படுகிறது.




இறந்த திமிங்கலத்தை பாஜ் ஒன்றுக்குள் ஏற்றுவதை நூற்றுக்கணக்கான மக்கள் லண்டன் பாலத்தில் கூடி நின்று பார்வையிட்டனர். பல படகுகள் கூடி நின்று சுற்றிவளைத்து, திமிங்கலத்தைக் காக்க முயன்றதில் அதில் அதிர்ச்சியடைந்தே மரணித்திருக்கலாம் என ஒரு தரப்பினர் குற்றஞ்சாட்டுகின்றனர் 1913 இற்குப் பின்னர் தேம்ஸ் நதிக்குள் திமிங்கலம் நுழைந்த இரண்டாவது சம்பவமாக இது உள்ளது.

# ஒன்றுக்காக ஒன்று அழிப்பு


பிரிட்டனில் அழிவடைந்து வரும் சிவப்பு அணில்களைக் காப்பாற்றுவதற்காக, சாம்பல் நிற அணில்கள் கூட்டம் கூட்டமாகக் கொல்லப்பட்டு வருகின்றன. இவ்வாறு சாம்பல் நிற அணில்கள் கொல்லப்படாவிட்டால், சிவப்பு அணில்கள் பூமியிலிருந்தே மறைந்துவிடும் எனப் பிரிட்டிஷ் உயிரினத்துறை அமைச்சர் ஜிம்நைட் கூறுகிறார். தற்போது 66 சாம்பல் நிற அணில்களுக்கு ஒரு சிவப்பு நிற அணில் என்ற சதவீதத்திலேயே இவற்றின் அடர்த்தி காணப்படுகிறது. சிவப்பு அணில்கள் பலவீனமான அணில்களாக உள்ளதே இந்தப் பெருக்கத்துக்குக் காரணம்.





எனினும் இந்தப் பாரிய கொலைகளினால் சாம்பல் நிற அணில்களை முற்றாக அழிப்பதல்ல. நமது நோக்கம் அழிவைக் கட்டுப்படுத்துவதற்கே என்கிறார் அமைச்சர் நைட். சிவப்பு அணில்கள் உள்ளூர் அணில்களாகும். ஆனால், சாம்பல் அணில்கள் 19 ஆம் நூற்றாண்டிலேயே வட அமெரிக்காவிலிருந்து பிரிட்டனுக்குக் கொண்டுவரப்பட்டன.

# அணுவால் சர்ச்சை



சக்தி வளத்தை அதிகரிக்க அணு உறைகளைத் தொடர்ந்து பேணுவதா மூடுவதா என்ற சர்ச்சை தொடர்ந்து பிரிட்டனில் நிலவுகிறது. இதற்கென்ற வாக்கெடுப்பு ஒன்றையே பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இணைய தளம் நடத்திவருகிறது.

எதிர்கால சந்ததிக்கு அதிகரித்த சக்திவளம் ஒரு பிரச்சினையாக உள்ள நிலையில், இது குறித்து விரைந்து முடிவு எடுக்கவேண்டும் என்கிறார் அணுச்சக்தி வர்த்தக செயலர் அலன் ஜோன்சன். இதை எதிர்ப்பவர்கள் அணுசக்தி செலவு கூடியது. பயங்கரவாதத் தாக்குதல் நடந்தால், கதிர் வீச்சால் பேரழிவு ஏற்படுமென வாதிடுகின்றனர்.

# ஊராங் ஊட்டான் எண்ணிக்கை வீழ்ச்சி



மலேஷியக்காட்டுப் பகுதிகள் வேகமாக அழிக்கப்படுவதால், ஊராங் ஊட்டான் எனும் **(Orangutans)** குரங்கினங்கள் அழிவடைந்து வருவதாக அண்மைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

கடந்த 200 வருடங்களாக இந்த வீழ்ச்சி அவதானிக்கப்பட்டுள்ளது.

மலேஷியாவில் உள்ள **(Kinabatangan)** காட்டின் சரணாலயப் பகுதியில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பரம்பரையியல் ஆய்வுகள் மேற்கொண்டதில் இந்தக் குரங்கினங்களின் உற்பத்திப் பெருக்கம் பெரியளவில் வீழ்ச்சி கண்டிருப்பது அவதானிக்கப்பட்டது.

ஆச்சரியம் தரும் வகையில் இந்த வீழ்ச்சியும், கடந்த 200 ஆண்டுகளில் அண்மைக்காலமாகவே அதிகமாக உள்ளதாகக் கார்ட்டிப் பல்கலைக்கழக ஆய்வுத்தலைவர் மைக்கல் புரூபோர்ட் தெரிவித்துள்ளார்.

# புளூட்டோ மூதாட்டி

1930 இல் நமது சூரிய குடும்பத்தில் தற்போது கடைசிக் கிரகமாக இருக்ும் **Pluto** கண்டுபிடிக்கப்பட்டபோது அந்தக் கிரகத்துக்குப் புளூட்டோ எனப் பெயர் வைத்த சிறுமிக்கு இப்போது 87 வயது. ஓய்வு பெற்ற ஆசிரியையான இவருக்கு 11 வயதாக இருக்கும் போது, புளூட்டோ கிரகம் கண்டுபிடிக்கப்பட்டது. சிறுவயதிலேயே விண்வெளியில் அவர் கொண்டிருர் வெனிட்டியா பெய என்ற சிறுமி ஒன்பதாவது கிரகத்துக்கு ரோமானியரின் பாதாள உலகக் கடவுளான புளூட்டோ என்ற பெயரை முன்மொழிந்திருந்தார்.



தனக்கு அந்தக் காலத்தில் கிரேக்க ரோம வரலாறுகளின் ஆர்வமிருந்ததாகக் கூறும் பெய மூதாட்டி - சிறுவயதிலேயே விண்வெளிக் கதைகளை ஆர்வமாக வாசித்ததாகக் கூறுகிறார். ஒன்பதாவது கிரகம் கண்டுபிடிக்கப்பட்ட செய்தியை நூலகப் பத்திரிகையில் **(Times)** பார்த்த போதே இந்தப் பெயர் மனதில் உதித்தது என்கிறார் அவர்.

தான் பெயரிட்ட கிரகத்தை ஆய்வு செய்ய நாசா கடந்த வாரத்தில் செய்மதியை ஏவியது குறித்து அவர் பெருமைப்பட்டுக் கொள்கிறார்.

# காடுகளிலிருந்து மெதேன் வாயு



சாதாரண தாவரங்களால் வெளியிடப்படும் மெதேன்வாயு சூரிய சக்தியை வளிமண்டலத்திலிருந்து பிடித்துக்கொள்வதில் அதிக பங்குவகிப்பதாக ஜேர்மனிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இதனால் காடுகளே பூமியின் முக்கிய சக்தி வளங்களாகக் காணப்படுகிறது என்ற கருத்து மீள வலியுறுத்தப்படுகிறது.

மெதேன்வாயு உற்பத்தி அதிகரிப்பு காற்று வெப்பமடையும்போது அதிகமாக இருக்கிறது. இதனால் காடுகள் காபனீரொட்சைட்டு மூலம் மட்டுமல்ல, மெதேன் வாயுவும் பச்சைவீட்டு விளைவை பூமியில் ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு வீடமைப்புக் கொடுப்பனவு வழங்கல்

கல்முனை —

கல்முனை பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளை மீள புனர்நிர்மாணம் செய்வதற்கு 21 கோடி 23 லட்சத்து 70 ஆயிரம் ரூபா இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

கல்முனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட இஸ்லாமாபாத், மருதமுனை, கல்முனை கல்முனைக்குடி பெரிய நீலாவணை ஆகிய பகுதிகளில் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கே இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான கொடுப்பனவு வழங்கப்பட்ட வீடுகளில் இதுவரை 1229 வீடுகளுக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவாக 5 கோடி 10 லட்சத்து 30 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

சுனாமியால் பகுதியளவில் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு 2 கட்டங்களிலும் முழுமையாகப் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு 4 கட்டங்களிலும் வீடமைப்புக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

முழுமையாகப் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் பகுதியளவில் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு 1 லட்சம் ரூபாவும் வீடமைப்புக் கொடுப்பனவாக வழங்கப்பட்டு வருகிறது.

அத்துடன் கல்முனை தமிழ் பிரதேச செயலர் பிரிவு, சாய்ந்தமருது பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இரண்டாம் கட்ட சுனாமி மீளமைப்புக் கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை.

இது குறித்து இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# கல்முனைப் பிரதேசத்தை சேர்ந்த 3 இளைஞர்களை காணவில்லை

கல்முனை —

கல்முனை பிரதேசத்தில் 3 இளைஞர்களைக் காணவில்லையென கல்முனையிலுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக கல்முனை பிராந்திய இணைப்பாளர் இரா. மனோகரன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்றில் ஒரு தமிழ் இளைஞரும் பொத்துவில் பிரதேசத்தில் 2 தமிழ் இளைஞர்களும் படையினரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கென தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொத்துவிலில் பெருமாள் பார்த்திபன் (வயது 24) என்ற இளைஞர் கடந்த 16 ஆம் திகதி பயங்கரவாத புலன் விசாரணைக் குழுவால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

இப்பகுதியைச் சேர்ந்த இன்னுமொரு இளைஞரான நவரத்தினம் ரவிச்சந்திரன் (வயது 28) கடந்த 21 ஆம் திகதி பொத்துவிலில் விசேட அதிரடிப்படையால் கைதுசெய்யப்பட்டு குற்றப்புலனாய்வு பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலவச பாடநூல் விநியோகம்!

கிளிநொச்சி —

கிளிநொச்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கான இலவச பாடநூல் விநியோகம் இந்த வாரத்தில் இடம்பெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

தற்போது பாடநூல்கள் கொழும்பிலிருந்து வவுனியாவுக்கு வந்துள்ளதாகவும்- வவுனியாவிலிருந்து இவை எடுத்துவரப்பட்டதும் இந்த வாரத்தில் பாடசாலைகளுக்கான பாடநூல் விநியோகம் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# சட்டவிரோத மதுபான நிலையங்கள் முற்றுகை

கிளிநொச்சி —

தாயகப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் சமூக சீரழிவுகளை ஒழிக்கும் நோக்குடன் மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ காவல்துறையினர் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட திடீர் தேடுதல் நடவடிக்கையின்போது - சட்டவிரோத மதுபான உற் பத்தியில் ஈடுபட்ட 13 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

பாலையடிவட்டை 39 ஆம் கிராமம் மற்றும் கோவில் போரதீவு ஆகிய இடங்களில் தமிழீழ காவல்துறையினர் இந்தத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது - கசிப்பு மற்றும் அதற்கான மூலப்பொருட்களும் அதன் உற்பத்தி உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன. கைதுசெய்யப்பட்டவர்கள் காவல்துறையினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்னர், தமிழீழ மாவட்ட நீதிமன்றத்தில் இவர்களுக்கு எதிரான குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளது.

# கழகங்களுக்கிடையே உதைபந்தாட்ட போட்டி

கிளிநொச்சி —

கிளிநொச்சி விளையாட்டுத் துறையின் அனுசரணையுடன் பூநகரி பிரதேச விளையாட்டுத் துறையினரால் 19 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

பூநகரிப் பிரதேச கழகங்களுக்கிடையில் நடத்தப்படவுள்ள இந்தப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் பூநகரி பிரதேச விளையாட்டுத்துறை இணைப்பாளர் ச.மூர்த்தியுடன் தொடர்புகொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (09)

# வட்டக்கச்சி விபத்தில் இரு யுவதிகள் காயம்!

வட்டக்கச்சி —

ஹையேஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு யுவதிகள் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் கடந்த 27 ஆம் திகதி வட்டக்கச்சி - பன்னாங்கட்டி பாலத்துக்கருகில் இடம்பெற்றது.

வட்டக்கச்சியிலிருந்து கிளிநொச்சி நோக்கி முன்னும் பின்னுமாக வந்து கொண்டிருந்த ஹையேஸ் வானும், மோட்டார் சைக்கிளும் ஒன்றுடனொன்று மோதியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டது.

கடந்த வருடம் பெய்த பருவ மழை காரணமாக இந்த வீதியை நீர் மேவி பாய்வதால் இந்தப் பாலத்துக்கு அருகிலுள்ள வீதிப்பகுதி நீர் நிரம்பி சேறும் சகதியுமாகக் காணப்படுகிறது. இதன் காரணமாக இந்த வீதியில் அடிக்கடி விபத்துகள் ஏற்பட வாய்ப்பாக இருக்கிறது.

குறிப்பிட்ட இந்த வீதிப்பகுதியை புனரமைத்து விபத்துச் சம்பவங்கள் இடம்பெறாமல் தடுக்க வேண்டுமென இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (09)

# புனர்வாழ்வு நிறுவனத்தால் வணிக விருத்திக் கடன்!

வட்டக்கச்சி —

ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் வணிக விருத்தி கடன் திட்டத்தின் முதலாவது கட்ட கடன் வழங்கும் நிகழ்வு கடந்த 9 ஆம் திகதி கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் 15 ஆயிரம் ரூபா வீதம் 22 பயனாளிகளுக்கு சுழற்சி முறை கடன் வழங்கப்பட்டது. கடன் வழங்குவதற்கான பயனாளிகள் தெரிவு வட்டக்கச்சி வர்த்தக சங்கத்தினரின் அனுசரணையுடன் கிளிநொச்சி புனர்வாழ்வு கழகத்தால் மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்தும் இந்தக் கடன் ஏனையோருக்கும் வழங்கப்படவிருப்பதாகவும் நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

நிகழ்வில் கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வுக்கழக செயலாளர், வட்டக்கச்சி பிரதேச அரசியல்துறை பொறுப்பாளர் ச.திருமாறன், தமிழர் புனர்வாழ்வுக் கழக கிளிநொச்சி கிழக்கு உதவிப் பணிப்பாளர் இ.நவநீதன், கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன திட்ட இணைப்பாளர் ப.தயாளன் உட்பட பலரும் கலந்துகொண்டனர். தொடர்ந்து சிறப்புரைகளும் இடம்பெற்றன.

# மட்டக்களப்பு நகரம் வழமைக்கு திரும்புகிறது

மட்டக்களப்பு —

கடந்த பல வாரங்களாக மயான அமைதி நிலவிய மட்டக்களப்பு நகர் வழமைக்குத் திரும்பியுள்ளதுடன், மாலை ஆறுமணிக்குப் பின்னரும் மக்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் ஜெனீவாவில் இடம்பெறவிருக்கும் பேச்சுவார்த்தையை யடுத்து மட்டக்களப்பு மாவட்ட தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் தற்போது மகிழ்ச்சி காணப்படுவதுடன், மாலை ஆறு மணிக்கே வீட்டுக்குள் முடங்கிக்கிடக்கும் மக்கள் தமது வழமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

வர்த்தக நிலையங்களும் வழமை போன்று திறக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன.

இதேவேளை, ஜெனீவாவில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையை முன்னிட்டு இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ, பௌத்த மதத் தலைவர்களும், சமய பெரியார்களும் தமது வரவேற்பைத் தெரிவித்துள்ளனர்.

தொடரும் அனைத்து சமாதானப் பேச்சுவார்த்தைகளும் சுமுகமாக இடம்பெற்று, நாட்டில் நிரந்தர சமாதானம் நிலைத்து அனைத்து இனங்களும் இன சௌஜன்யத்துடன் வாழ பிரார்த்திக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளனர்.

# விளையாட்டு கழகங்களை புனரமைக்க நடவடிக்கை

சம்மாந்துறை —

சம்மாந்துறைப் பிரதேச செயலக விளையாட்டுக் கழகங்களைப் புனரமைப்புச் செய்ய புதிதாக இடமாற்றம் பெற்று வந்த விளையாட்டு அதிகாரி ஐ.எம்.கடாபி நடவடிக்கை எடுத்து வருகிறார்.

பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான புனரமைப்புக் கூட்டம் நேற்று மு.ப 10 மணிக்கு சம்மாந்துறைப் பிரதேச செயலாளர் எம்.எம்.நசீர் தலைமையில் நடைபெற்றது.

கடந்த ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக இந்தப் பிரதேசத்தில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறாதது குறித்து கழகங்கள் முறைப்பாடு செய்துள்ளன. கழகங்களின் ஆவணங்களும் சீராகப் பேணப்படவேண்டியதன் அவசியத்தையும் அவை வலியுறுத்தியுள்ளன.

எனவே, கழகங்களைப் புனரமைத்து ஒற்றுமையுடன் பல செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல இந்தக் கூட்டம் உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# முல்லைத்தீவு மீனவர்கள் கடலுக்கு செல்ல அச்சம்!

முல்லைதீவு —

முல்லைதீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் நேற்றும், நேற்றுமுன்தினமும் கடலுக்குச் செல்லவில்லை எனத் தெரியவருகிறது.

முல்லைத்தீவுக் கடல் அதிக கொந்தளிப்புடன் காணப்படுவதாலேயே கடலுக்குச் செல்லவில்லை என அந்தப் பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

அண்மையில் சுமாத்திராவில் ஏற்பட்ட பூகம்பத்தால் முல்லைக் கடற்பரப்பில் கடல் அலையின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதால், மீனவர்கள் தமது படகுகளைக் கரையேற்றியுள்ளனர்.

இதேவேளை, முல்லைதீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் இரவு நேரக் தொழிலை மிகவும் அவதானத்துடன் மேற்கொள்ளுமாறு முல்லைத்தீவு கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசம் அண்மையில் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

# தொழிற்பயிற்சி பெற்ற யுவதிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன!

திருகோணமலை —

திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்தின் முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடத்தப்பட்ட தொழிற்பயிற்சி நெறிகளில் பயிற்சி பெற்ற யுவதிகளுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்தின் முறைசாராக் கல்வி பிரிவு பாடசாலையை விட்டு விலகிய யுவதிகளுக்கு 8 மாத கால தொழிற்பயிற்சி நெறியை நடத்தியது.

இதில் அழகுக்கலை, ஒப்பனை, சிகை அலங்காரம், கைவேலை, தையல், புத்தகம் கட்டுதல் ஆகிய துறைகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. 62 தொழிற்பயிற்சி பெற்ற யுவதிகளுக்கு இதன்போது சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து இவர்களால் உருவாக்கப்பட்ட பொருட்களின் கண்காட்சியும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் திருமலை வலயக் கல்விப் பணிப்பாளர் கு.திலகரெத்தினம், முறைசாராக் கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ஒ.குலேந்திரம், சிறுவர் பாதுகாப்பு நிதிய உத்தியோகத்தர் அ.கார்த்திக் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.



திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்தில் முறைசாரா கல்விப் பிரிவினரால் நடத்தப்பட்ட தொழிற்பயிற்சி நெறிகளில் பங்குபற்றிய யுவதிகளுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. இதன்போது அங்கு இடம்பெற்ற கண்காட்சி மற்றும் கலைநிகழ்வுகளை படங்களில் காணலாம்.

நமது ஈழநாடு

வைர வரிகள்

தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்.
- திருக்குறள்

## நமது நோக்கு

# ஆற்றாமை

போர் நிறுத்த அமுலாக்கம் தொடர்பாக ஜெனிவாவில் பேச்சு நடத்த விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்துள்ள நிலையில் - இந்தப் பேச்சுக்களில் பங்கேற்பதற்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதில் அரசாங்கம் பெரும் குழப்பத்தில் இருக்கிறது.

ஐ.தே.க.வின் நாடாளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், அரச தரப்புக் குழுவில் தலைமை வகிப்பார் என்று முன்னர் கூறப்பட்ட அதே வேளை - பின்னர் மகிந்த சமரசிங்க, மங்கள சமரவீர என்று மாறி இப்போது ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே என வந்து நிற்கிறது.

விடுதலைப்புலிகள் பேச்சு நடத்த இணக்கம் தெரிவித்த மறுகணமே தமது தரப்பில் பேச்சுக்களில் பங்கேற்கவுள்ள குழுவில் இடம்பெற்றுள்ள பிரதிநிதிகள் பற்றிய விபரங்களை வெளியிட்டுவிட்டனர்.

ஆனால், ஒருவாரமாகியும் அரச தரப்புக்குழுவில் இடம்பெறவுள்ளோர் யாரெனத் தெரியாத நிலை காணப்படுவதுடன் - பேச்சுக்கான திகதி தீர்மானிக்கப்பட்டதும்தான், தமது தரப்புக் குழுவின் விபரங்கள் வெளியிடப்படும் என அரசு மழுப்பிக் கொண்டிருக்கிறது.

இதிலிருந்து ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது. அரசாங்கம் பேச்சுக்களுக்கு இப்போதும் கூட தன்னைத் தயார்படுத்தி கொள்ளவில்லை என்று.

புலிகள் பேச்சுக்கு வரமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் தான் - ஜெனிவாவில் பேச்சு நடத்தும் பொறியை இலங்கை அரசு புலிகளுக்கு வைத்தது. ஆனால் இந்தப் பொறிக்குள் சிக்கிக் கொண்டுள்ளது அரச தரப்புத்தான்.

அரசாங்கத் தரப்பு பேச்சு வார்த்தைக் குழுவைத் தெரிவு செய்வதிலேயே, முடிவுகளை எடுக்க முடியாமல் திண்டாடுகின்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம், எப்படி இந்தப் பேச்சுக்களை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப் போகிறது?

உண்மையில், பேச்சுவார்த்தைக் குழுவில் இடம்பெறும் அமைச்சர்களோ அல்லது அதிகாரிகளோ முடிவுகளை எடுக்கும் அதிகாரம் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பது விடுதலைப் புலிகள் நீண்டகாலமாக வலியுறுத்தி வந்த விடயமாகும்.

கடைசியாக நடந்த பேச்சுக்களில் கூட பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான அரச குழு முடிவுகளை எடுக்கும் திராணியற்றிருந்ததாகவும் - எதற்கெடுத்தாலும் கொழும்புடன் ஆலோசித்து விட்டு கூறுகிறோம் என்று, பேச்சுக்களை முடித்துவிட்டுத் திரும்பியதாகவும் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன.

இப்போதும் கூட மகிந்த ராஜபக்ஷ, பீரிஸ் தலைமையிலோ அல்லது வேறெந்த அமைச்சர் தலைமையிலோ அனுப்பக்கூடிய பேச்சுவார்த்தைக் குழுவும் கூட முடிவுகளை எடுக்கும் அதிகாரம் உள்ளதாக இருக்க வேண்டும்.

ஏனென்றால் - போர் நிறுத்த அமுலாக்கம் குறித்தே பேச்சுக்கள் நடத்தப்படவுள்ள நிலையில் - இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படாத பல விதிகளை அமுலாக்குவது குறித்த தீர்மானங்களை எடுக்கவேண்டியுள்ளது.

இப்படிப்பட்ட நிலையில்-முடிவுகளை எடுக்கும் திராணியற்றவர்கள் - அரசாங்கப் பேச்சுவார்த்தைக் குழுவில் இடம்பெற்றால் பேச்சுக்கள் மேலும் இழுபறி நிலையிலேயே இருக்கும்.

அதேவேளை, இந்தக் குழுவில் இடம்பெறும் பிரதிநிதிகள் தொடர்பாக - ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூட இறுதியான முடிவை எடுக்கும் நிலைமை இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.


ஏனென்றால், ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற அடிப்படைவாத சக்திகளின் துணையுடன் ஆட்சி நடத்தும் இவரால், நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக இருந்தாலும் கூட, சுயமாக முடிவுகளை எடுக்க முடியாத நிலை காணப்படுகிறது.

ஜெனிவா பேச்சுக்களுக்கு அரச தரப்பு சம்மதம் கொடுத்தும் கூட - அதற்கான பிரதிநிதிகளை நியமிக்காமல் இழுபறிப்பட்டுக்கொண்டிருப்பது, இந்த அரசாங்கத்தின் ஆற்றாமையை சர்வதேசத்துக்கு முன் வெளிப்படுத்தியுள்ளது.

இது போலவேதான் பேச்சுக்களின் போதும் அரசுக்கு இதைவிட மோசமான நெருக்கடிகள் ஏற்படக் கூடும் என்பதையே தான் இந்த நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

*267, Navalar Road,*
*Jaffna.*
*T.P. - 021-2225107*
*www.eezhanaadu.com*

## நாடும் நடப்பும்




# பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக பேச்சுக்களுக்குப் பின்னரே முடிவு!

## மானிய ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு —

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஆரம்பமாகவுள்ள பேச்சுக்களின் பின்னர் தோன்றும் சூழ்நிலைக்குஏற்பவே எதிர்காலத்தில் மாணவர்களை யாழ். மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களில் அனுமதிப்பது தொடர்பான தீர்மானம் எடுக்கப்படும் எனப் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் மென்டிஸ் தெரிவித்தார்.

அத்துடன் - முஸ்லிம், சிங்கள மாணவர்களை இந்தப் பல்கலைக்கழகங்களில் அனுமதிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் நிலவும் பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாக அந்தப் பிரதேசங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் கற்றுவந்த முஸ்லிம், சிங்கள மாணவர்களை வேறு பிரதேசங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் அனுமதிப்பதற்கு அண்மையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஏனைய பல்கலைக்கழகங்களில் இடநெருக்கடி நிலவியபோதிலும், இந்தத் தீர்மானத்தை எடுக்க நேரிட்டது. தொடர்ந்தும் அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது.

எவ்வாறாயினும், கடந்த வருடம் நடைபெற்ற உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை இதேபோன்று வேறு பல்கலைக்கழகங்களில் அனுமதிப்பது தொடர்பாக இதுவரை எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லையென பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற அடையாள அட்டை கட்டாயம்!

கொழும்பு —

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சைக்குத் தேசிய அடையாள அட்டைகளைக் கட்டாயப்படுத்துமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க அறிவித்துள்ளார்.

பரீட்சை மோசடிகளைத் தடுப்பதற்காகவே இந்த நடைமுறை கடைப்பிடிக்கப்படவுள்ளதாகவும், சகல பரீட்சார்த்திகளும் விரைவில் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார்.

க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் ஏப்ரல் 21ஆம் திகதி முதல் மே 18ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை- அடுத்த வருடம் முதல் க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் ஓகஸ்ட் மாதத்தில் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# யுத்தம் மற்றும் சுனாமியால் 2948 ஆலயங்கள் அழிவு!

கொழும்பு —

இலங்கையில் யுத்தம் காரணமாகவும், சுனாமி அனர்த்தம் காரணமாகவும் சுமார் 2948 புனித தலங்கள் அழிக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. இந்த நிலையில் இவற்றைப் புனரமைப் பதற்கு 2538 மில்லியன் ரூபாய் தேவை எனப் புனரமைப்பு அமைச்சு மதிப்பிட்டுள்ளது.

யுத்தம் காரணமாக மொத்தம் 2420 புனித தலங்கள் அழிவடைந்துள்ளன. இவற்றுள் 1479 இந்து ஆலயங்களும், 475 தேவாலயங்களும், 165 பௌத்த விகாரைகளும், 301 பள்ளிவாசல்களும் அடங்குகின்றன. சுனாமி அனர்த்தம் காரணமாக 300 இந்துக் கோயில்களும், 97 பள்ளிவாசல்களும், 35 தேவாலயங்களும், 96 பௌத்த விகாரைகளும் அழிவடைந்துள்ளன.

# சுதந்திர தினத்தை முன்னிட்டு விசேட போக்குவரத்து ஒழுங்குகள்

கொழும்பு —

நாட்டின் 58 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு கொழும்பில் விசேட போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் ஒரு கட்டமாகக் காலி வீதியின் சுற்றுவட்டம் முதல் பழைய நாடாளுமன்ற கட்டட சுற்றுவட்டம் வரையிலான பகுதி நேற்று முதல் எதிர்வரும் 3 ஆம் திகதி வரை ஒத்திகை காரணமாக குறிப்பிட்ட மணித்தியாலங்களுக்கு மூடப்பட்டிருக்குமெனப் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இன்றும் முற்பகல் 9 மணி முதல் மாலை 4 மணிவரை இந்த வீதிப் பகுதி போக்குவரத்துக்களுக்காக மூடப்படும்.

நாளை முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை பாதை மூடப்படும்.

இதேவேளை - எதிர்வரும் 2 ஆம் திகதியும் 3 ஆம் திகதியும் காலை 6.30 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை இந்த வீதி மூடப்பட்டிருக்கும்.

# சிறைக் கைதி சுருக்கிட்டு தற்கொலை

கொழும்பு —

காலி சிறைச்சாலையில் கைதி ஒருவர் நேற்று முன்தினம் இரவு சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹிக்கடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதான இளைஞரே தற்கொலை செய்து கொண்டதாகச் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டு இவர் கடந்த சனிக்கிழமை சிறையில் அடைக்கப்பட்டார்.

# சந்தேக நபர் பதுளையில் கைது!

கொழும்பு —

பதுளை பிரதேசத்தில் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடைய சந்தேக நபர் என ஒரு இளைஞன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் இளைஞர்களுக்கு ரூ .15 ஆயிரம் ஊதியம் அளிப்பதாகக் கூறி ஆட்சேர்ப்பு நிறுவனம் நடத்தியவர் என்று விசாரணையில் தெரிவந்ததாகவும், இந்த ஆட்சேர்ப்பின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு 100 இற்கும் மேற்பட்டோரைச் சேர்த்துள்ளார் என்றும், ஊவா பிரதேச பிரதிப் பொலிஸ்மாஅதிபர் எம்.ஜே.மிஸ்கின் தெரிவித்தார்.

இதனிடையே ஓமந்தை வீதியில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சிங்கள இளைஞர் தாம் விடுதலைப் புலிகளால் பயிற்சி அளிக்கப்பட்டவர் என்றும், மேலும் 200 பேருக்குப் புலிகள் பயிற்சி அளித்து வருவதாகவும் கூறியதாகக் கொழும்பு ஆங்கிப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# இராஜதந்திரசமரிலும் கூட தோற்றது மகிந்தவின் அரசு



அமைதி முயற்சியில் அடுத்த காய்நகர்த்தலுக்கு தயாராகிவிட்டனர் விடுதலைப் புலிகள். திரைமறைவில் யுத்த முனைப்புக்களை தீவிரப்படுத்தி, யுத்தகால அமைச்சரவையை கூட உருவாக்கும் திட்டங்களை வகுத்துக் கொண்டு, வெளியே சமாதானத்தின் பிரியர் போல நாடகமாடுகிறது இலங்கை அரசு.

தனது பங்காளியான ஜாதிக ஹெல உறுமயவை தூண்டிவிட்டு, அமைதி முயற்சிக்கு முயற்சிப்பவர்களின் ஒரு சாதாரண ஹெலிகொப்டர் வசதியைக் கூட பெரிதாக திரிபுபடுத்தி, தான் பெரும் அழுத்தங்களின் மத்தியில் அமைதி முயற்சியில் ஈடுபட்டு இருப்பது போல மகிந்த வெளி உலகுக்கு நாடகத்தை தொடங்கினார்.

அதாவது 'நான் அடிப்பது போல அடிக்கிறேன் நீ அழுவது போல அழு' என்று. ஆனால் அன்ரன் பாலசிங்கம் ஹெலிகொப்டரில் வந்து கிளிநொச்சியில் இறங்கிய பின்பு, அரசை விட்டு ஹெல உறுமய வெளியேறவில்லை.

அதேபோலவே பேச்சுவார்த்தைக்கான இடப்பிரச்சினையும். இதற்கும் ஜே.வி.பி, ஹெல உறுமயவுடன் சேர்ந்து நாடகமாடியது.

இனப்பிரச்சினையை விட பேச்சுவார்த்தைக்கான இடத்தை பெரிதுபடுத்த முற்பட்டார்கள். இனவாதிகளான இவர்கள் தாங்களாகவே ஒரு எதிர்ப்பை கொண்டு வந்து, பின் தாங்களாகவே கரணமடித்தார்கள்.

சுவிற்சர்லாந்து ஐரோப்பிய ஒன்றியத்தில் இல்லையே தவிர, அது ஒரு ஐரோப்பிய நாடு. ஆசியாவை ஏன் மறந்தார்கள் இவர்கள்?

இவை அனைத்தும் வெளி உலகுக்கு தாங்கள் பெரும் அழுத்தத்தில இருப்பது போன்ற மாயையை உருவாக்கும் திட்டம்.

### இதற்கு வழிசமைத்தவர்கள் யார்?

இன்று இனவாத சிங்கள ஆங்கில் ஊடகங்களும் சிங்கள புலனாய்வுத் துறையும் தலைகால் புரியாமல் ஆடுவது எதனால்?

1948 இல் தமிழ் மக்களுக்கு அநீதியிழைத்த பிரிட்டன்தான் 2005 இலும் ஒரு கொடுமையை இழைத்தது.

தனது கைக்கு ஐரோப்பிய ஒன்றியத் தலைமை பொறுப்பு வந்தவுடன் யார் செய்தார்கள் என்று இலங்கை அரசால் கூட தடயங்களை கண்டுபிடிக்க முடியாது போன வெளிநாட்டமைச்சர் கதிர்காமரின் கொலையை - இலங்கை அரசின் போலிப்பிரசாரத்தை நம்பி, புலிகளை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் வரவேற்பதில்லை என்று புதிய அழுத்தத்தை கொண்டு வந்தார்கள்.

போர் நிறுத்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை புலிகளை சினமடைய வைக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

இதன் மூலம் குதூகலமடைந்த சிங்கள அரசு இந்தத் தடையை முழுமையான தடையாக மாற்றுவதற்கு தனது புலனாய்வுத் துறையையும், துணை ஆயுதக்குழுக்களையும் பயன்படுத்தி அப்பாவி மக்களையும், இனப்பற்றாளர்களையும் கொன்று, அந்தப் பலியைப் புலிகள் மீது சுமத்தி, தனது இனவாத சிங்கள, ஆங்கில ஊடகங்களின் மூலம் சர்வதேசத்துக்கு காட்ட முற்படுகிறது.

இதில் மிகக் கேவலமான குற்றச்சாட்டு மாமனிதர் பரராஜசிங்கத்தை புலிகள் கொலை செய்ததாக ஒரு சிங்கள நாளேடு செய்தி வெளியிட்டமை. நீங்கள் அவதானித்தீர்களானால், பிரிட்டனின் தடைக்கு பின்பு தான் இந்தக் கொலைகள் உச்சக்கட்டத்துக்குச் சென்றுள்ளது. இந்தக் கொலைகளுக்கும், குழப்ப நிலைக்கும் பிரிட்டனின் நடவடிக்கை மறைமுக காரணியாகவுள்ளது என்பது மறுப்பதற்கில்லை.

ஒரு புறம் நிழல் யுத்தத்திலும் மறுபுறம் சர்வதேசத்தில் புலிகளுக்கு அழுத்தத்தையும், அரசுக்கு ஆதரவையும் தேடும் மகிந்தரின் முயற்சியில் முதற்படியாக, எரிக் சொல்ஹெய்மை வசை பாடியபடி இந்தியாவுக்கு ஓடினார்.

இந்தியா கைவிரித்துவிட, தனது வெளிநாட்டமைச்சரை அமெரிக்காவுக்கு அனுப்பினார்.

### இவை எல்லாம் ஏன்?

உண்மையிலேயே சமாதானத்தை விரும்பியிருப்பின், சமாதானத்துக்கு உதவ எப்பவும் தயாராக இருந்த நோர்வேயை நாடியிருப்பார்.

ஆனால், அவர் தனது பலவீனமான படைக்கு பலம் சேர்க்கும் முயற்சிக்கே உலகெங்கும் பிச்சை எடுக்கிறார்.

அமெரிக்கா பங்காளியாக விரும்பவில்லை. ஆனால், மக்கள் படையின் தாக்குதலால் நிலை குலைந்துபோயுள்ள இலங்கை படைகளுக்கு ஆறுதல் வார்த்தை கூற முன்வந்துள்ளது.

அமெரிக்கத் தூதுவர் ஜெப்றி லான்ஸ்ரீட் சொல்கிறார் -

வலிமையான இராணுவத்தை புலிகள் சந்திக்க வேண்டி இருக்குமாம். இருக்கட்டும் சோவியத்தின் ஸ்ராலின்கிராட்டை ஆக்கிரமித்த போது, ஜேர்மன் இராணுவம் உலகில் வலிமை மிக்க இராணுவம் தான்.

ஆனால், சோவியத்தின் செம்படையும், மக்களும் திருப்பித் தாக்கும் போது, ஜேர்மன் இராணுவத்தால் தனது நாட்டு எல்லைகளைக் கூட பாதுகாக்க முடியாமல் போய்விட்டது.

வலிமையான இராணுவம் இருக்க ஏன் உலகெங்கும் உதவி கேட்டு திரிகிறார்கள்?

ஜெப்றி லான்ஸ்ரீட்டின் கருத்து மிகப் பலவீனமான இலங்கை படைகளை மறைமுகமாக இனங்காட்டி நிற்கிறது. இதே அமெரிக்கர்கள் தான் ஆனையிறவை மிகப்பலம் வாய்ந்த முகாம் என சந்திரிகாவுக்கு அறிக்கை சமர்ப்பித்தவர்கள். அத்துடன் விடவில்லை, நடைபெற்ற எல்லாத் தாக்குதல்களும் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறுகிறார்.

சரி, அவரிடம் ஆதாரங்கள் இருந்தால், கண்காணிப்புக் குழுவிடம் கொடுக்கலாம். அவர்கள் தான் ஆதாரம் கேட்டுத்திரிகிறார்கள்.

தனது அரசின் மீது சரிந்து போயுள்ள சர்வதேச நிலைப்பாட்டை மீளக் கட்டியெழுப்ப முயல்கிறார் மகிந்த. மக்கள் படையின் தாக்குதலை அடுத்து, புலிகள் ஒரு தலைப்பட்சமாக யுத்தத்தை தொடங்கப் போகிறார்கள் என வழமை போல இராணுவ புலனாய்வுத்துறையின் தவறான கணிப்பீட்டை நம்பித் தன்னை சமாதானப் பிரியராக உலகுக்குக் காட்ட நாடகமாடுகிறார்.

அதன் வெளிப்பாடே அண்மையில் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடு, ஐரோப்பிய நாட்டில் பேச்சு நடத்த ஒப்புக்கொண்டவை எல்லாம்.

ஆனால், மகிந்த ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதில் இருந்து அமைதிக்காக எந்தவித நல்லெண்ண சமிக்ஞைகளும் ஏற்படுத்தவில்லை என்பது தான் உண்மை.

இறுதியாக புலிகள் தனக்கு மூச்சு விடக் காலம் தரவில்லை என அனுதாப அலையை ஏற்படுத்த முயன்றார். தமிழ் மக்களையும், விடுதலைப் புலிகளையும் பயன்படுத்தி சிங்கள அரசு உலக ஆதரவைப் பெறுவதை விடுதலைப் புலிகள் அனுமதிக்கப்போவதில்லை. எனவே அரசின் இராஜதந்திரத்தை முறியடிக்க விடுதலைப் புலிகள் மிகச் சாதுர்யமாகக் காய் நகர்த்திவிட்டார்கள்.

நாளாந்த இராணுவ படுகொலைகளிலும், அக்கிரமத்திலும் சிக்கித் தவித்த தமிழ் மக்களை விடுவிக்க அரசுக்கும், சர்வதேச உலகுக்கும் புலிகளால் கொடுக்கப்பட்ட இறுதிச் சந்தர்ப்பமாக ஒஸ்லோவில் பேச்சு என்ற தங்கள் நிலையை தளர்த்தி ஜெனீவாவில் பேச சம்மதித்திருக்கிறார்கள்.

அதிலும் ஒருபடி மேலேபோய், கைதியாக இருந்த அரசின் பொலிஸ் ஒருவரை விடுதலை செய்து, ஒரு நல்லெண்ண சூழலை உருவாக்கியுள்ளனர் புலிகள்.

ஆனால், ஜெனீவாவில் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முன்னர் அரசு இயல்பு நிலையை உருவாக்க வேண்டும்.

தேசியத் தலைவரின் தொலைநோக்கு சிந்தனையுள்ள இந்தமுடிவு அரசின் கபட நாடகத்தை இலகுவாக அம்பலப்படுத்திவிடும். இப்போது பந்து அரசினதும், அரசுக்கு முண்டு கொடுக்கும் சில உலக நாடுகளினதும் தலையில். மகிந்த இந்த முடிவை எதிர்பார்த்திருக்கமாட்டார். என்ன செய்யப் போகிறார்?

பேச்சுவார்த்தை யுத்தநிறுத்த அமுலாக்கத்தை பற்றியதாகவே இருக்கவேண்டும் என புலிகள் உறுதிபடக் கூறிவிட்டார்கள்.

யுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்தி புலிகள் பலமடைகிறார்கள் என கூக்குரலிடும் கூட்டணியில் புதைந்து போயுள்ள மகிந்தவால் யுத்த நிறுத்தத்தைப் பலப்படுத்த முடியுமா?

யுத்த நிறுத்த அமுலாக்கத்தில் அரசால் மிகவும் சிக்கலாக்கப்பட்ட சரத்துக்களாவன -

விதி 1:8 இன்படி அரசாங்கம் தமிழ் ஆயுதக்குழுக்களிடம் இருந்து ஆயுதங்களைக் களைதல், தமிழ் ஆயுதக்குழுக்களை வடக்கு - கிழக்குக்கு அப்பாற்பட்ட பகுதிகளுக்கு அகற்றுதல் வேண்டும். கண்காணிப்புக்குழுவும், இணைத்தலைமை நாடுகளும் இதனை பலமுறை அரசிடம் எடுத்துக் கூறியுள்ளன. எனவே பேச்சின் போது அரசு இதைத்தட்டிக் கழிப்பது முடியாத காரியம்.

விதி 2:11 இன்படி மீன்பிடி கட்டுப்பாடானது படிப்படியாகத் தளர்த்தப்பட்டு, இரவு பகல் மீன்பிடிக் கட்டுப்பாடுகளும் விலக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இப்போது தான் அதிகப்படியான கட்டுப்பாடுகளை அரசும், இராணுவமும் விதித்துள்ளது.

விதி 2:12 இன்படி பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தேடுதல்கள், கைது செய்தல் என்பன நடக்கக்கூடாது. ஆனால் கதிர்காமரின் கொலையைப் பயன்படுத்தி, கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டம் பாரதூரமான யுத்த நிறுத்தமீறலாகும்.

விதி 2:3, 2:4 இன்படி படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பாடசாலைகள், பொதுக்கட்டடங்கள் விடுவிக்கப்பட வேண்டும். இதை அமுல்படுத்த விடாது உயர் பாதுகாப்பு வலயத்தை பாதுகாப்பு காரணத்தைக் காட்டி அறிக்கை சமர்ப்பித்தவர்தான் தற்போதைய இராணுவத் தளபதி. இப்போது இதனை அவர் நிறைவேற்றுவாரா?

விதி 2:5 இன்படி பாதுகாப்பு நடவடிக்கைகளையும், சோதனைச் சாவடிகளையும் குடிசனங்கள் நெருக்கமாக உள்ள நகரங்களிலும், பட்டணங்களிலும் பொதுமக்களுக்குத் தொந்தரவு செய்யப்படுவதைத் தவிர்க்கும் வகையில் அகற்றுதல் வேண்டும். தற்போது புதிது புதிதாகக் காவலரண்கள் அமைப்பதில் தான் இராணுவம் முனைப்புடன் ஈடுபடுகிறது.

மேற்கூறப்பட்ட சரத்துக்களை அமுலாக்குமா அரசு? புலிகளின் இந்த நகர்வு - அரசியல், இராணுவ ரீதியாக பலவீனப்பட்டுள்ள அரசை மேலும் பலவீனமாக்கும் என்பதே நிதர்சனம்.

யுத்த மேகம் தற்காலிகமாக ஜெனீவா நோக்கி நகர்ந்துள்ளது. அத்துடன் நில்லாமல் மகிந்தவுக்கு மூச்சுவிட அல்ல, பேசவே காலம் கொடுத்துள்ளார்கள் புலிகள். ஜெனீவா பேச்சு அரசின் நாடகத்தை அம்பலப்படுத்தும் என்பது மட்டும் உண்மை யாவதுடன் மீண்டும் இராஜதந்திரத்தில் தோற்றுப் போனது சிங்கள அரசு.

- அருள்ஸ் -

# நெருக்கடிக்குள் சிங்கள அரசு!



தமிழீழ விடுதலைப் புலிகளின் ராஜதந்திர முனைப்புகளே திருப்புமுனைகளாக இருப்பதை, அரசாங்கத்தினுடனான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கின்றபோதும் தெரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. இது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான புகழ்ச்சி என்றில்லாமல் ஒரே தலைமை, சிங்கள தலைமைத்துவத்தைப் பற்றித் தெளிவாகப் புரிந்து வைத்திருப்பதால் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் எனக் கொள்ளலாம்.

இலங்கையில் தேசிய கொள்கை மற்றும் வெளிநாட்டு கொள்கை என்ற விடயங்களுக்கு எந்த ஒரு அரசாங்கமும் முக்கியத்துவம் வழங்கவில்லை. ஐக்கிய தேசியக்கட்சி கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இந்த தேசிய கொள்கை பற்றிப் பெரிதாக பேசினாலும் ஜனாதிபதித் தேர்தலில் அது தோல்வி கண்டமையால் அதன் முனைப்புக்கும் தோல்வி ஏற்பட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு அதைப்பற்றி இன்னும் சிந்திக்கவே இல்லை.

பொதுவாக இலங்கையின் இனப் பிரச்சினைக்குப் பெரும்பான்மை சிங்கள மக்களின் ஒப்புதல் அவசியம் என பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கின்ற போது அரசாங்கத்தினால் கருத்துகள் முன்வைக்கப்படுவதுண்டு. அதனை அரசாங்கங்கள் நேரடியாகச் சொல்லாமல் சர்வதேசத்துக்குக் கூறும் பாணியில் தென்னிலங்கையின் ஒப்புதல் இனப் பிரச்சினைத் தீர்வுக்கு அவசியம் எனக் கூறி வருகின்றன.

இது கடந்த 20 வருட காலங்களாகச் செயலற்ற ஒரு கருத்தாகவே இருந்து வந்தது. எனினும் தென்னிலங்கையின் கட்சிகள் இதனை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக பிரச்சினைகளை அதிகரித்து மறுபுறத்தில் தமிழர்களின் போராட்டத்தை நலிவடையச் செய்யும் நடவடிக்கைகளில் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கமும் சுதந்திரக்கட்சி தலைமையிலான அரசாங்கங்களும் ஈடுபட்டுவந்தன.

அரசியலின் இருப்பு சம்பந்தமான நடவடிக்கைகளாக இவை இருந்த போதும் அந்தக் கட்சிகள் தமிழர் போராட்டத்தை நலிவடையச் செய்யும் முனைப்புகளில் அவ்வப் போது வெற்றி பெற்று வந்தமையை மறுக்க முடியாது.

1956ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து 1987ஆம் ஆண்டு காலம் வரையிலான பகுதியில் தமிழ் தரப்பினருக்கும் அரசாங்கங்களுக்கும் இடையிலான ஆவணக் கைச்சாத்தல்கள் யாவும் தமிழர் தரப்புக்கே பாதகமாக அமைந்தன.

மலையக மக்களின் பிரஜாவுரிமை பறிப்பு, முதல் இந்திய - இலங்கை ஒப்பந்தம் வரையிலான நடவடிக்கைகள் யாவும் தமிழர்களின் இருப்பை பாதிக்கும் செயல்களாகவே அமைந்தன. எனினும் 2002ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் தமிழர்களின் நியாயங்களைத் தட்டிக் கழிக்க முடியாத நகர்வு ஒன்றுக்கு வழியை ஏற்படுத்தியது. இதற்குக் காரணம் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்ட வளர்ச்சியும் ராஜதந்திர நகர்வுகளும் எனக் கூற வேண்டும்.

அரசாங்கத்துக்கு ஈடான தரப்பு என்ற வகையில் இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இதன் காரணமாகவே ஏனைய ஒப்பந்தங்கள் போலல்லாமல் இந்த ஒப்பந்தத்தில் இருந்து அரசாங்கத் தரப்பால் விலகிச் செல்ல முடியவில்லை.

இந்த நிலையில்தான் போர் நிறுத்தம் குறித்து ஜெனிவாவில் பேச்சு நடத்த வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது. இன்று எந்தச் சிங்கள பெரும்பான்மை அரசாங்கம் தமிழர் களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமோ அந்த சிங்கள அரசாங்கத்திடம் தமிழர் பிரச்சினைக்காகத் தீர்வு ஒப்படைக்கப்பட்டுள்ளமையானது தமிழர்கள் மத்தியில் பேசப்படும் ஒரு அம்சமாக இருந்து வருகிறது.

தென்னிலங்கையில் முன்னர் தமிழரின் பிரச்சினை தீர்வுக்கு முட்டுக்கட்டையாக இருந்து வந்ததாகக் கூறப்பட்ட ஜே.வி.பி மற்றும் சிஹல உறுமயவின் பிந்திய வளர்ச்சியான ஜாதிகஹெல உறுமய ஆகியன இன்று தமிழர்களின் பிரச்சினை விடயத்தில் விட்டுக்கொடுக்க வேண்டிய நிலைக்கு ஆட்பட்டுள்ளன. இறுதியாக ஜெனிவா பேச்சு வார்த்தைக்கு ஹெல உறுமய எதிர்ப்புத் தெரிவித்துள்ள போதும் அது அந்தக் கட்சியின் அரசியல் இருப்பை மையமாகக் கொண்ட எதிர்ப்பு மட்டுமே என்பதை யாரும் அறிவர்.

அடுத்த பக்கத்தில் இன்று பதவியில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் தீர்மானங்களை எந்த ஒரு கட்டத்திலும் எதிர்க்க முடியாத கட்டத்துக்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் தள்ளப்பட்டுள்ளது.

அடுத்த பக்கத்தில் இன்று பதவியில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் தீர்மானங்களை எந்த ஒரு கட்டத்திலும் எதிர்க்க முடியாத கட்டத்துக்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியும் தள்ளப்பட்டுள்ளது.

தமிழர் தரப்பின் ராஜதந்திர நகர்வுகள் காரணமாக இன்று வடக்கு - கிழக்கு மற்றும் மலையக தென்னிலங்கையின் அனைத்துத் தமிழ்க்கட்சிகளும் ஒற்றுமைப்பட வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.


மீண்டும் ஒரு முறை தமிழக மக்களின் பேராதரவு இலங்கையின் தமிழர் தரப்புக்குக் கிடைத்துள்ளது.

இதன் காரணமாக இந்திய மத்திய அரசாங்கமும் முன்னரைப் போன்று வெளிப்படையாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பைக் காட்டும் சம்பிரதாயப் போக்கைக் கடைப்பிடிக்க முடியாத நிலை உருவாகி வருகிறது.

அது தொடர்ந்தும் பேணப்பட வேண்டுமாயின் சர்வதேசத்தின் மற்றும் தென்னிலங்கையின் பிரித்தாளும் முனைப்புகளுக்கு இடம் கொடுக்காத உறுதி தமிழர் தரப்பின் மத்தியில் ஏற்படுவது அவசியம்.

- இந்திரஜித் -

# ருடன் கூட்டணி அமைப்பது? புதிய தமிழகம் குழப்பத்தில்!



திருச்சி —

தமிழக சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க கூட்டணியா, தி.மு.க கூட்டணியா என்று தெரியாமல் புதிய தமிழகம் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமி குழப்பத்தில் உள்ளார்.

சட்டசபைத்தேர்தலில் புதிய தமிழகம் கட்சியின் நிலைப்பாடு குறித்து ஆலோசிக்க மாநில அளவிலான செயற்குழுக்கூட்டம் திருச்சியில் நேற்று முன்தினம் கட்சித்தலைவர் கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது நிருபர்களிடம் பேசிய கிருஷ்ணசாமி–

தமிழகத்தில் 2001 சட்டசபைத் தேர்தலில் தி.மு.க வுக்கு எதிராகப் பல கட்சிகள் கூட்டணி அமைக்கப்பட்டபோதும் புதிய தமிழகம் தி.மு.கவுக்கு கை கொடுத்தது. ஆனால், 2004 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க தலைமையில் பெரிய கூட்டணி அமைக்கப்பட்டபோது புதிய தமிழகம் புறக்கணிக்கப்பட்டது. அதிலிருந்து புதிய தமிழகம் நடுநிலையோடு செயற்பட்டுவருகிறது.

தற்போது 2006 சட்டசபைத் தேர்தலில் தமிழகத்தில் 150 தொகுதிகளில் புதிய தமிழகம் போட்டியிட முடிவு செய்துள்ளது. தென் மாவட்டங்களை விட தற்போது திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகை போன்ற மத்திய மாவட்டங்களில் அதிக இடங்களில் புதிய தமிழகம் போட்டியிடவுள்ளது என அவர் தெரிவித்தார்.

# தமிழக சட்டசபை தேர்தல்; வாழ்வா சாவா போராட்டம்!

## என்கிறார் விஜயகாந்த்



திருச்சி —

தமிழக சட்டசபைத்தேர்தலில் இரு பணக்காரக்கட்சிகளுக்கும், ஒரு ஏழைக்கட்சிக்கும் இடையே போட்டி நடக்கிறது. இந்தத் தேர்தல் எனக்கு வாழ்வா, சாவா போராட்டம் என்று தே.தி.மு.க கட்சித் தலைவர் விஜயகாந்த் தெரிவித்தார்.

தேசிய முற்போக்கு திராவிட கழகத் தலைவர் விஜயகாந்த் கடந்த சில நாட்களாகத் தமிழகம் முழுவதும் தீவிர தேர்தல் பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்.

திருச்சி மாவட்டத்தில் துவரங்குறிச்சியில் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட பிரசாரத்தில் அவர் பேசியதாவது –

கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சியிலிருந்த தி.மு.க மற்றும் அ.தி.மு.க கட்சிகள் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டிக்கொள்வதிலேயே நேரத்தைப்போக்குகின்றன. இரு கட்சிகளின் தொலைக்காட்சிகளும் அடுத்தவர் மீது குறை கூறுவதையே வழக்கமாகக் கொண்டுள்ளன. அவர்கள் செய்த தவறுகளை நான் கூற வேண்டியதில்லை.

நான் யாருடனும் கூட்டணி வைத்துக்கொள்ளமாட்டேன். மக்களை நம்பியே வாழ்வா, சாவா போராட்டத்தில் இறங்கியிருக்கிறேன்.

இந்தத் தேர்தல் இரு பணக்கார கட்சிகளுக்கும், ஒரு ஏழைக்கட்சிக்கும் நடக்கும் தேர்தல். என்னுடைய படங்களில் எந்த வகையில் நான் மக்களுக்கு கருத்துக்களை சொல்லியிருக்கிறேனோ, அதேபோல் மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே அரசியலுக்கு வந்துள்ளேன்.

கடந்த காலங்களில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் எல்லாம் தங்கள் குடும்பத்துக்கும், உறவினர்களுக்கும் தேவையான சொத்துக்களை சேர்ப்பதிலேயே குறியாக இருந்தனர்.

அரசியல்வாதிகள், லஞ்சம் வாங்கித் தங்களை வளப்படுத்திக்கொள்கின்றனர். அவர்களைப்பார்த்து அதிகாரிகளும் லஞ்சம் வாங்குகின்றனர். தி.மு.க., அ.தி.மு.க இரு கட்சிகளையும் ஆட்சிப்பொறுப்புக்கு வரவிடாமல் தடுத்தாலே, 25 சதவீத லஞ்சத்தை ஒழித்துவிடலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சயனைட் கொடுத்தே வீரப்பன் கொல்லப்பட்டார்

## உயர்நீதிமன்றில் மனைவி வழக்கு

சென்னை —

சந்தனக் கடத்தல் வீரப்பன் சயனைட் கொடுத்தே பொலிஸாரால் கொல்லப்பட்டதாக அவரது மனைவி முத்துலட்சுமி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது –

சமீபத்தில் மேட்டூர் அருகே சந்திரப்பட்டியைச்சேர்ந்த ஜோசியர் ஒருவர் என்னைச் சந்தித்தார்.

அப்போது அவர் எனது கணவர் (வீரப்பன்) சுட்டுக்கொல்லப்படவில்லை. பழனி என்பவரும் மற்றவர்களும் சேர்ந்து விஷம் கொடுத்தே கொன்றனர் என்று தெரிவித்தார்.

இது தொடர்பாக உண்மை அறியும்குழு, சிவில் உரிமைப்பாதுகாப்புக்குழு, மனித உரிமைகள் அமைப்பு ஆகியவற்றுடன் தொடர்புகொண்டேன். அவர்கள்மூலம் விரைவாக பழனி சொன்ன தகவலை மைக்ரோ டேப் மூலம் எடுத்துள்ளேன்.

இது பற்றி பழனி கூறுகையில் –

அதிரடிப்படை பொலிஸார் தன்னை அணுகி சயனைட் விஷம் கொடுத்தார்கள். அதை மோரில் கலந்து வீரப்பன், சேத்துக்குழி கோவிந்தன், சந்திர கவுடா, சேதுமணி ஆகியோருக்கு கொடுத்தோம் என்று கூறியிருக்கிறார்.

இதைக்குடித்து வீரப்பன் மயங்கி விட்டதாகவும், அதன்பிறகே அதிரடிப் படையினர் அவரது மீசையை எடுத்து விட்டு மாறுவேடத்தில் இருந்ததை போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி அப்புறப்படுத்தினார்கள் என்றும் பழனி தெரிவித்தார்.

சயனைட் கொடுத்ததற்காக தங்களுக்கு அதிரடிப்படை தலா ரூ 7லட்சம் வழங்கியதாகவும் பழனி சொல்லியிருக்கிறார்.

எனவே வீரப்பனை அதிரடிப் படையினர் சயனைட் கொடுத்து கொன்றிருக்கிறார்கள். இதை மறைத்து ஏதோ சாதனை படைத்ததுபோல் வெகுமதி பெற்றுவிட்டார்கள்.





பிரேத பரிசோதனை செய்த வைத்தியர்கள் வீரப்பன் உடலில் விஷம் இல்லை என்றுகூறி மறைத்து விட்டார்கள். இதற்காகச் சம்மந்தப்பட்டவர்கள்மீது குற்றவியல் நடைமுறை சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சாதனை படைத்ததாகக் கூறி அதிரடிப் படையினருக்கு வழங்கப்பட்ட பரிசுகளையும், இதர சலுகைகளையும் திரும்பப்பெறவேண்டும். அவற்றை அதிரடிப்படையால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொடுக்கவேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

ஏற்கனவே வீரப்பனின் மரணம் குறித்து சி.பி.ஐ விசாரணை நடத்தக் கோரி முத்துலட்சுமி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து இருந்தார்.

நீதிபதி கற்பக விநாயகம் தலைமையிலான நீதிமன்றில் இந்த மனு மீதான விசாரணை நிலுவையில் உள்ளது. அதனுடன் புதிதாக முத்து லட்சுமி தாக்கல் செய்த மனுவும் சேர்த்து விசாரிக்கப்படும்.

# புதுச்சேரி காங்கிரஸுடன் அ.தி.மு.க கூட்டணி!



சென்னை —

புதுச்சேரி சட்டசபைத் தேர்தலுக்கு அ.தி.மு.கவுடன் ப.கண்ணனின் புதுச்சேரி முன்னேற்றக் காங்கிரஸ் நேற்று முன்தினம் கூட்டணி உடன்பாடுசெய்து கொண்டது.

தமிழக சட்டசபைத் தேர்தலுடன் புதுச்சேரி மாநில சட்டசபைத் தேர்தலும் நடைபெறவுள்ளது. புதுச்சேரியில் அ.தி.மு.கவுடன் முன்னாள் அமைச்சர் ப.கண்ணனின் – புதுச்சேரி முன்னேற்றக் காங்கிரஸ் கட்சி கூட்டணி அமைத்துப் போட்டியிடுகிறது. இது குறித்து அ.தி.மு.க வெளியிட்ட அறிவிப்பில் –

முதல்வர் ஜெயலலிதாவை அவரது இல்லத்தில் புதுச்சேரி முன்னேற்ற காங்கிரஸ் கட்சியின் நிறுவகத் தலைவரும், புதுச்சேரி மாநில முன்னாள் அமைச்சருமான ப. கண்ணன் மற்றும் எம்.எல்.ஏ.லட்சுமிநாராயணன் ஆகியோர் நேரில் சந்தித்துப் பேசினர்.

விரைவில் புதுச்சேரி சட்டசபைக்கு நடைபெறவுள்ள தேர்தலில் அ.தி.மு.கவும், புதுச்சேரி முன்னேற்ற காங்கிரஸ் கட்சியும் கூட்டணி அமைத்து தேர்தலைச் சந்திப்பது குறித்து பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இந்தப் பேச்சுவார்த்தை மிகவும் சுமுகமான முறையில் நடைபெற்றது என்க் குறிப்பிடப்பட்டது.

# மத்திய அமைச்சரவையில் வாசன்!

புதுடெல்கி —

இருபது மாத இடைவெளிக்கு பின்னர் இந்திய அமைச்சரவை நேற்று முன்தினம் மாற்றியமைக்கப்பட்டது. பல்வேறு காரணங்களுக்காக அமைச்சரவை விஸ்தரிப்பு பலமுறை ஒத்தி வைக்கப்பட்டது.

வோல்கர் குழு அறிக்கை காரணமாக நட்வர்சிங், நானாவாதி குழு அறிக்கையைத் தொடர்ந்து ஜெகதீஷ் டைட்லர், பதவியை முறைகேடாக பயன்படுத்தியதால் ஜெயபிரகாஷ் நாராயணன் யாதவ் ஆகியோர் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தனர்.

காஷ்மீர் முதலமைச்சரானதால் குலாம்நபி ஆசாத்தும், ஜார்கண்ட் முதலமைச்சர் பதவிக்கு ஆசைப்பட்டு சிபுசோரனும் பதவி விலகினார்கள். மாநிலங்களவை துணைத் தலைவராக நியமிக்கப்பட்டதால் ரகுமான் கான் அமைச்சர் பதவியிலிருந்து வெளியேறினார். மத்திய அமைச்சர்களான பி.எம். சயீத், சுனில்தத் ஆகியோர் மரணமடைந்தனர். இதனால் அமைச்சரவையில் 8 வெற்றிடங்கள் இருந்தன.

20 மாத இடைவெளிக்குப் பிறகு மத்திய அமைச்சரவை நேற்றுமுன்தினம் மாற்றம் செய்யப்பட்டது. 18 பேர் புதிய அமைச்சர்களக நியமிக்கப்பட்டனர். இதில் 7 பேர் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களாவர். மற்றைய 11 பேர் இணை அமைச்சர்களாவர்.

புதிய அமைச்சரவை அமைச்சர்கள் வருமாறு –

சசிக்குமார் ஹிண்டே – ஆளுனர், ஏ.ஆர் அத்துலே முதலமைச்சர், முரளி தியோரா, வயலார் ரவி, அம்பிகா சோனி – பொதுச்செயலாளர்,சைபுதீன் சோஸ், சிபுசோரன்.

புதிய இணைஅமைச்சர்கள் வருமாறு –

ஜி.கே. வாசன் தனிப் பொறுப்பு, பவன்குமார் பன்சால், ஆனந்த்சர்மா, அஜய் மசேன், பள்ளம் ராஜு, சந்திரசேகர் சாகு, அதிலேஷ்தாஸ், அஸ்வின் குமார், புரந்தரேஸ்வரி (என். டி.ராமராவ் மகள்), தினாஷ் பட்டேல், சுப்பிராமி ரெட்டி.

மணிசங்கர் அய்யர் வகித்து வந்த பெட்ரோலியம்துறை மாற்றப்பட்டுள்ளது. மணிசங்கர் அய்யருக்கு பஞ்சாயத்து ராஜ், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

நட்வர்சிங் பதவி விலகியதால் வெளியுறவுத் துறையை பிரதமர் மன்மோகன் சிங் கவனித்துவருகிறார். தற்போதும் அவரே தொடர்ந்து கவனித்து வருவார்.

தமிழக காங்கிரஸ் தலைவரான ஜி.கே.வாசனுக்கு புள்ளியியல் மற்றும் திட்ட அமுலாக்கம் (தனி பொறுப்பு) இலாக வழங்கப்பட்டுள்ளது.

இந்திய அமைச்சரவையில் ஏற்கனவே தமிழகத்தைச் சேர்ந்த 12 பேர் அமைச்சர்களாக இருந்தனர். தற்போது தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருக்கும் ஜி.கே.வாசன் மத்திய அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு புள்ளியியல் மற்றும் திட்ட அமுலாக்கம் இலாகா ஒதுக்கப்பட்டுள்ளது.

## திண்டிவனம் ராமமூர்த்தியை

# கட்சியிலிருந்து நீக்குவதற்கு காங்கிரஸ் கட்சி நடவடிக்கை



சென்னை —

தமிழக சட்டசபைத் தேர்தலில் தி.மு.கவும், காங்கிரஸும் கூட்டணி அமைத்துள்ள நிலையில் – அதற்கு எதிர்ப்புத்தெரிவித்துவரும் திண்டிவனம் ராமமூர்த்தியை கட்சியிலிருந்து நீக்குவதற்கு காங்கிரஸ் கட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

காங்கிரஸிலுள்ள வன்னியத் தலைவர்களை திரட்டி கூட்டம் நடத்தி கருணாநிதியையும், ஜி.கே.வாசனையும் திண்டிவனம் ராமமூர்த்த் விமர்சித்தார். அன்றுமுதல் அவருடைய செயற்பாடுகளை கட்சி மேலிடம் உன்னிப்பாகக் கவனித்து வந்தது.

வட மாவட்டங்களில் காங்கிரஸுக்குத் தொகுதி ஒதுக்காமல் தி.மு.க புறக்கணித்ததாக திண்டிவனம் ராமமூர்த்தி புகார் கூறினார். கூட்டணி ஆட்சிக்குச் சம்மதிக்க வேண்டும், காங்கிரஸுக்கு துணை முதலமைச்சர் பதவி ஒதுக்கவேண்டும் என்றும் கருணாநிதிக்கு நிபந்தனை விதித்தார்.

திண்டிவனம் ராமமூர்த்தியை அடக்கிவைக்க கட்சி மேலிடம் கடிதம் அனுப்பியது. ஆனாலும், அது நடக்கவில்லை. எதிர்ப்பை முன்பைவிடத் தீவிரப்படுத்தியுள்ள திண்டிவனம் ராமமூர்த்தி மாவட்டம்தோறும் சுற்றுப்பயணம் செய்து ஆதரவாளர்களைத் திரட்டிவருகிறார். தற்போது இந்திரா காந்தி பெயரில் புதிய அமைப்பையும் தொடங்கியுள்ளார்.

தமிழக காங்கிரஸ் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள வீரப்பமொய்லி சமரச முயற்சியில் ஈடுபட்டார். திண்டிவனம் ராமமூர்த்தியுடன் தொலைபேசியிலும் அடிக்கடி பேசினார். அந்த முயற்சியும் தோல்வியில் முடிந்தது.

கட்சிக்கட்டுப்பாட்டை எந்த அளவுக்கு மீற முடியுமோ அந்த அளவுக்கு திண்டிவனம் ராமமூர்த்தி மீறிவிட்டார் என்று வீரப்பமொய்லி ஆதங்கப்பட்டார்.

திண்டிவனம் ராமமூர்த்தி அ.தி.மு.கவுக்கு ஆதரவாக செயற்படுவதாக மேலிடம் சந்தேகிக்கிறது. தேர்தலின்போது அ.தி.மு.கவுக்கு அவர் ஆதரவளிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னையில் நடத்திய வன்னிய அமைப்புக்கள் கூட்டத்தில் திண்டிவனம் ராமமூர்த்தி பங்கேற்றது மேலிட தலைவர்களுக்கு அதிர்ச்சியை அளித்துள்ளது. இந்தக் கூட்டத்தில் பா.ம.க இடம்பெறும் கூட்டணிக்கு ஆதரவளிப்பதில்லை என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

எனவே, திண்டிவனம் ராமமூர்த்தி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க காங்கிரஸ் மேலிடம் முடிவுசெய்துள்ளது. விரைவில் அவர் கட்சியிலிருந்து நீக்கப்படுவார் என்று தமிழக காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. திண்டிவனம் ராமமூர்த்தி பற்றி வீரப்பமொய்லி அறிக்கை தயாரித்து வருகிறார்.

இதை ஓரிரு நாட்களில் அகில இந்திய காங்கிரஸ் கட்சிக்கு அனுப்பவுள்ளார். அதன்பிறகு திண்டிவனம் ராமமூர்த்தி காங்கிரஸிலிருந்து நீக்கப்படுவார் என்று கூறப்படுகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அரச ஊழியர் சம்பள உயர்வு இம்மாதத்தில் நடைமுறைக்கு

கொழும்பு—

அரச ஊழியர்களுக்கு 2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் போது அதிகரிக்கப்பட்ட சம்பள உயர்வின் அடிப்படையில் வழங்கப்படவேண்டிய 50வீதமானதொகையை, 2006ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின்படி வழங்குவதற்கு அறிவித்த சம்பள அதிகரிப்புடன் இம்மாதம் முதல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று அலரிமாளிகையில் நடைபெற்ற அரசஊழியர்களின் தொடர் சங்க சம்மேளன தலைவர்களுடனான கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் புதிய சம்பளத் திட்டம் தொடர்பாக 2006ஆம் ஆண்டு திஸ்ஸ தெய்வேந்திர அரசாங்க நிர்வாக சுற்று நிரூபத்தின்படி எழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே இந்தச் சந்திப்பின் நோக்கமாகும்.

குறித்த சுற்றுநிரூபத்தின்படி அடிமட்டத்திலுள்ளஅரச ஊழியர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாக தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டினர்.

இதன் பின்னர் அரசாங்கத்தின் அனைத்துதுறைகளும் உள்ளடங்கும்விதமாக சம்பளம் தொடர்பான தேசிய கொள்கைத்திட்டம் வகுப்பதற்கு தேசிய சபை உறுப்பினர்களுடனு தொழிற்சங்க பிரதிநிதிகளுடனு இணைந்து குழு ஒன்றை அ பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்

எனினும் 2006ஆம் ஆ வரவு செலவுத்திட்டம் மூலம் கப்பட்ட வாக்குறுதி இம்மாத இருந்து அனைத்து அரசாங்க ஊ களுக்கும்வழங்க தீர்மானித்துள்ள திபதி 2005ஆம் ஆண்டு வரவு செ திட்டம் மூலம் அதிகரிக்கப்பட்ட ச உயர்வில் வழங்கப்பட வேண் 50வீதமான தொகையை ஜன முதல் வழங்க தீர்மானித்துள்ளதா தெரிவித்தார்.

## அமெரிக்கத் தூதரை...

தொடர்ந்து எழுப்பப்பட்டன.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரின் மிரட்டல் உரையை தமிழக மக்களுக்குத் தெரிவிக்கும் வகையில் தமிழக நாளிதழ்களில் வெளியான அமெரிக்கத் தூதுவரின் உரையையும் -

லத்தின் அமெரிக்க நாடுகளில் உருவாகிவரும் சோசலிச அரசுகளுடன் விடுதலைப் புலிகள் நேரக்கரம் நீட்டுவதை விளக்கி, இந்திய இடதுசாரிகள் விடுதலைப் புலிகளை ஆதரிக்க வலியுறுத்தும் துண்டுப் பிரசுரங்களும் பேரணின் போது வீதிகள்தோறும் வழங்கப்பட்டன.

சர்வதேச சமூகம் கூறிவருகின்ற பயங்கரவாதம் என்பதற்கான வரையறைகள் என்ன? என்று கடந்த மாவீரர் நாள் உரையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கூறியதையும் துண்டுப் பிரசுரமாக தந்தை பெரியார் திராவிடர் கழகத்தினர் வழங்கினர்.

சேலம் நகர முக்கிய வீதிகளூடாக நகர்ந்த இந்தப் பேரணி, 2 மணித்தியாலங்கள் கழித்து போஸ் மைதானத்தை வந்தடைந்தது.

போஸ் மைதானத்தில் பெருந்திரளாகக் கூடியிருந்த தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள் - அமெரிக்கத் தூதுவரின் அச்சுறுத்தும் உரைக்குக் கண்டனம் தெரிவித்தும், தமிழீழ விடுதலைக்குத் தமிழகத் தமிழர்களின் ஆதரவை வெளிப்படுத்தியும் முழக்கங்களை எழுப்பினர்.

ஆகிய முழக்கங்களை பேரணியிலும், ஆர்ப்பாட்டத்திலும் திரண்டிருந்த நூற்றுக்கணக்கானோர் உரத்த குரலில் முழக்கம் எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டம் ஒரு மணித்தியாலம் நடைபெற்றது.

தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ. மணி, தமிழின உணர்வாளர் புதுக்கோட்டை பாவாணன், ராஜீவ் வழக்கில் சிறையில் வாடும் பேரறிவாளனின் தாயார் அற்புதம் குயில்தான் அம்மையார், தமிழின உணர்வாளர் மு.அந்தாலனார், விடுதலைச் சிறுத்தைகளின் சேலம் மாவட்டச் செயலாளர் தமிழன், தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் சேலம் மாவட்டத் தலைவர் முல்லை வேந்தன், மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் ஆனையப்பன், தமிழ்ச் சான்றோர் பேரவையின் பாவலர் எழுஞாயிறு, தமிழர் இயக்கத்தின் ஆறுமுகம் உள்ளிட்ட 30 இற்கும் மேற்பட்ட இயக்கங்களின் பிரதிநிதிகளும், தமிழின உணர்வாளர்களும் போஸ் மைதானத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கண்டன உரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ.மணி பேசியபோது -

இலங்கையில் யுத்த நிறுத்த ஒப்பந்தசரத்துக்கள்எதனையுமேஇலங்கை அரசாங்கம் நிறைவேற்றவில்லை. இப்போது பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது. பேச்சுவார்த்தைக்குப் போகின்ற இலங்கை அரசாங்கம், யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைச் செயற்படுத்தித்தான் ஆக வேண்டும். அப்படி யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைச் செயற்படுத்தாத நிலை ஏற்பட்டால் சர்வதேசத்துக்கு ஒரு உண்மையும் தெரியவரும். அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இராணுவம் இருக்கிறதா? அல்லது சிங்களப் பேரினவாதிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறதா? என்கிற அந்த உண்மை வரத்தான் போகிறது.

தமிழகத்திலிருந்து ஈழத் தமிழர்களுக்காக ஆதரவாகக் குரல் கொடுத்துக் கொண்டிருப்பதில் எதுவித பொருளும் இல்லை. தமிழகத்திலும் உரிமை பெற்ற தமிழர்களுக்கான தனியரசு அமைகின்ற போதுதான் ஈழத் தமிழர்களுக்கான நமது குரல் அர்த்தமுடையதாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

## கடற்படை...

எல்.லியனாரச்சி திருகோணமலைக்கும், லெப்டினன் ஐ.எஸ்.கருணா நாயக்க திருகோணமலைக்கும் இட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த 8 அதிகாரிகளினதும் இட மாற்றங்கள் வருடாந்தம் இடம் பெறும் இட மாற்றங்களுக்கு ஏற்பட நடைபெறும் வழமையானது என்று கடற்படை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## குடாநாட்டில்...

களின் ஆசனங்களை கழற்றியும் மற்றும் பல்வேறு பாகங்களை கழற்றிக் காண்பிக்குமாறும் பொதுமக்களை வற்புறுத்தி வருகின்றனர்.

ஜெனீவா பேச்சுக்களுக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வரும் நிலையில் படையினரின் இத்தகைய சோதனைக் கெடுபிடிகளால் பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

## தமிழ் விவசாயியின் சடலம் மீட்பு!

திருகோணமலை—

திருகோணமலை சேருநுவர - அரியம்கேணி என்ற இடத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் 45 வயதான தமிழ் விவசாயி ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தங்கையா ஜேர்சா என்பவரது சடலமே மீட்கப்பட்டதென்றும், இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்திவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த சனிக்கிழமையும் லிங்கபுரம் என்ற இடத்தில் தமிழ் விவசாயி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மாணவனைக் காணவில்லை

யாழ்ப்பாணம்—

வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரிக்குச் சென்ற மாணவன் 15 நாட்களாகியும் இன்னும் வீட்டுக்குத் திரும்பவில்லையென பெற்றோர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சுழிபுரம் கிழக்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த இராமநாதன் ரதீஸ்குமார் (வயது 20) என்ற இளைஞரே காணாமல் போனவராவார்.

வட்டுக்கோட்டை தொழிலநுட்பக் கல்லூரியில் தொழில்பயிற்சி கற்கைநெறியை கற்றுவரும் மகன் கடந்த 1 ஆம் திகதி தொழில்நுட்பக்கல்லூரிக்குச் செல்வதாகக் கூறிச்சென்றதாகவும், நேற்றுவரை வீட்டுக்குத் திரும்பவில்லை என்றும் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

## வவுனியா - வேப்பங்குளத்தி வீட்டின் மீது கிரனேட் வீச்சு!

வவுனியா—

வவுனியா - வேப்பங்குளத்தில் பொதுமகன் ஒருவர் வீட்டின் மீது நேற்று முன்தினம் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

வவுனியா நகரிலிருந்து 3 கிலோ மீற்றர் வடமேற்கிலுள்ள வேப்பங்குளம் பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும் இத்தாக்குதலில் எவரும் காயமடையவில்லை.

கடந்த 14 ஆம் திகதி பொங்கல் தினத்தின் போதும் தற்போது தாக்குதலுக்குள்ளான வீட்டின் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ், இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆகியவற்றிடம் தாக்குதலுக்குள்ளான வீட்டின் உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார்.

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை ஆயுதக் குழுவால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கக் கூடும் என்று அந்தப் பிரதேச மக் தெரிவித்தனர்.

கடந்த சில நாட்களில் வவுன வில் இடம்பெற்ற 6ஆவது குண் தாக்குதல் இதுவாகும்.

கடந்த சனிக்கிழமை வவுன வில் வீடு ஒன்றின் மீதான கைக்கு டுத் தாக்குதலில் ஒரு பெண்ணு அவரது இரு குழந்தைகளும் படுகா மடைந்தனர். கோபி முகாமையா நிறுவனத்தை நடத்தி வந்த குமார் என்பவரது வீட்டின் மீ இந்தத் தாக்குதலில் அவரது மனை வியும், குழந்தைகளும் காயமடை தனர்.

அதேபோல், வவுனியா ரத்ன ரேடர்ஸ் நிறுவன உரிமையாளர் வீ டின் மீதும் கடந்த திங்கட்கிழமை கைக்குண்டு வீசப்பட்டது. தனியா கல்வி நிறுவன விரிவுரையாள கமலச்சந்திரனும் கடந்த திங்க கிழமை அடையாளம் தெரியாத ந களால் படுகொலை செய்யப்பட் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழர் புனர்வாழ்வுக்கழக...

என்று கதறியழுதபோதிலும் அவர்கள் எவ்வித ஈவிரக்கமுமின்றித் தாக்கப்பட்டு, கண்கள் துணிகளால் மூடிக் கட்டப்பட்ட நிலையில் வாகனம் ஒன்றில் கடத்திச் செல்லப்பட்டனர்.

இவர்களுடன் பயணித்த ஏனைய பணியாளர்கள் தங்களுக்கும் ஏதேனும் நடந்துவிடுமோ என்ற பதற்றத்திலும், அச்சத்திலும் யாருடனும் உடனடியாகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்பின்றி தொடர்ந்தும் பயணிக்க முடியாதவாறு கடத்தல்காரர்களால் அச்சுறுத்தப்பட்ட நிலையில் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான தகவல்கள் கடத்தப்பட்டு 4 மணி நேரத்தின் பின்பே தப்பிவந்தவர்களால் தெரிவிக்கமுடிந்தது.

கடத்தப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பான தகவல்கள் எதனையும் இதுவரையில் அறிய முடியாதுள்ளது. கடத்தப்பட்டவர்களில் நால்வர் தொடர்பான விபரங்கள்:-

சுரேந்திரன் (சிறுவர் இல்லங்களின் இணைப்பாளர்), பிறேமினி (மட்டக்களப்பு மாவட்ட தமிழர் பு வாழ்வுக் கழகத்தின் கணக்காள இரவி (சிறுவர் இல்லங்களின் கண காளர்) வசந்தன் (சிறுவர் இல்லா ளின் கணக்காளர்).

கடத்தப்பட்டவர்களில் ஐவர் உ பட 15 பேரும் வவுனியாவில் நட பெறவிருந்த கணக்கியல் தொ பான பயிற்சிநெறி வகுப்பில் க கொள்வதற்காக மட்டக்களப்பு மாவ அலுவலகத்திலிருந்து வவுனி நோக்கிச் சென்றுகொண்டிருந்த கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய...

தளத்தை வந்தடைந்த தியாகி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, பாதுகாப்பு அமைச்சு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முப்படைகளின் தளபதி தயா சந்தகிரி மற்றும் முப்படைகளின் தளபதிகள் ஆகியோரையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

இருப்பினும் இந்திய விமானப் படைத் தளபதியின் வருகைக்கான நோக்கம் குறித்து இலங்கை விமானப்படைத் தரப்பு எதுவிதத் தகவலையும் தெரிவிக்கவில்லை. கடந்த டிசெம்பரில் தென் பிராந்திய இந்திய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் பீ.எஸ். தக்கர் இலங்கைக்கு வருகை தந்தார். இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள வவுனியா முன்னரங்கப் பகுதிகளை அவர் பார்வையிட்டார்.

அவரைத் தொடர்ந்து இந்திய கடற்படையின் கிழக்குப் பிராந்திய கப்பற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் சுரேஸ் மேத்தாவும் டிசெம்பர் 12 முதல் 16 வரை இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டார்.

## மகளை...

தான் எமது பிள்ளைகளுக்கா மதியான வாழ்வு கிடைக்கும்

எமது தலைவர் போரா ஆரம்பிப் பதற்கு முன்னர் அ தலைவர்களுடன் சேர்ந்து அ வரும் சத்தியாக்கிரகம் செய்தன ஆனால், எங்களுக்கு முடிவு வ வில்லை. வன்னியில் நாங்க அனைவரும் வயது வேறுபாடின் தலைவருடன் சேர்ந்து போரா னோம்.

எங்களுக்கு மிகப் பெரிய வெற் கள் கிடைத்தன. அதனால்தா இன்று ஓரளவு நிம்மதியாக இ முடிகிறது. அனைவருமாக னொரு முறை முயற்சித்தால் இ வெற்றியையும் பெற்று, நிரந்தர நிம்மதி எங்களுக்குக் கிடை விடும்.

கடந்த காலங்களில் எமது கு பம் போராட் டத்துக்கு பல்வேறு உ விகளைச் செய்தது. ஆனால், எமது பிள்ளைகள் எவரும் முழுமையாக இணைந்து போராடவில்லை எமக்கு அருகிலிருக்கும் குடும்பத்தில் இரண்டு பிள்ளைகள் மாவீர்களா இருக்கிறார்கள்.

இனிமேலும் இப்படியான குடு பங்களில் தங்கிநின்று, குளிர்காய்ந் நாம் வாழ்க்கையை ஓட்டுவது மனச் சாட்சிக்குச் சரியானதல்ல. அதனால் தான் நாம் எமது மகளின் சம்மதத் தோடு அனைவருமாக இந்த முடி வுக்கு வந்தோம். எனத் தெரிவித் தார்.

இந்த நிகழ்வில் பிரதேச அரசியற் துறைப் பொறுப்பாளர், தூயவன் அரசறிவியல் கல்லூரிப் போராளிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## சுமுகமான நிலை உருவாகும் வரை...

யில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கடந்த 2002 ஆம் ஆண்டு போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து இருதரப்புக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையில் - அந்த உடன்படிக்கையில் நடைமுறைப்படுத்துவதாக ஒப்புக் கொண்ட விடயங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி தொடர்ச்சியாக பொங்கு தமிழ் எழுச்சிப் போராட்டங்களையும், ஆர்ப்பாட்டப் பேரணிகளையும் நடத்திவந்துள்ளோம்.

ஆட்சியிலிருந்து அரசுகள் மாறினாலும் மக்களது வாழ்வில் எவ்வித மாற்றங்களும் ஏற்படாத நிலையில், கடந்த நவம்பர் மாதம் ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்ற நாளில் இருந்து யாழ்.குடாநாட்டில் மக்கள் மீதும், பல்கலைக்கழக மாணவர்கள் மீதும், பாடசாலை மாணவர்கள் மீதும் இராணுவ வன்முறைகள் அதிகரிக்கப்பட்டதுடன், பல்கலைக்கழக சுற்றாடலிலும் குடாநாட்டின் சகல பகுதிகளிலும் அளவுக்கதிகமான படையினர் குவிக்கப்பட்டு, இயல்பு நிலை முற்றாகக் குழப்பப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர்கள் மீதும், மக் கள் மீதும் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட் டது.

இந்தநிலையில், இராணுவ வன்முறைகளை நிறுத்தி, பல்கலைக்கழக சூழலில் இருந்து இராணுவத்தினரை வெளியேற்றி, சுமுகமான கற்றல் சூழலை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் தலைமையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகம் நோக்கி அமைதியாக நடத்தப்பட்ட ஊர்வலத்தின் மீது இராணுவ வன்முறையைப் பிரயோகித்து அடக்கமுயன்றதுடன் மறுநாள் பல்கலைக்கழக வளவினுள் புகுந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்து - மாணவர்கள், விரிவுரையாளர்களை கண்மூடித்தனமாகத் தாக்கினர்.

இதனால், கல்விச் செயற்பாடுகளை சுமுகமாக முன்னெடுக்கக் கூடிய சூழல் உருவாக்கப்படும்வரை - இராணுவ வன்முறைகள் நிறுத்தப்படும்வரை எமது கல்விச் செயற்பாடுகளை நிறுத்தவேண்டிய நிலை மாணவர்களுக்கு ஏற்பட்டது.

இந்த நிலையில் - அரசுக்கும் புலிகளுக்குமிடையில் பேச்சுக்கள் நடைபெறவுள்ள சூழலில் எமது கல்விச் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்கக் கூடிய சூழல் உருவாகியுள்ளதா? என்பது தொடர்பாக நேற்று துணைவேந்தர், பீடாதிபதிகள், மாணவர் ஒன்றியப் பிரதிகளுக்கிடையில் கலந்துரையாடல் ஒன்று நடந்தப்பட்டது. இதில் மாணவர்களது பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இதுவரை காலமும் பிற மாவட்ட மாணவர்களுக்கும், யாழ். குடாநாட்டின் வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், மற்றும் காரைநகர் ஆகிய பிரதேசங்களிலிருந்து வந்து தங்கியிருந்த தனியார் வீடுகளுக்குச் சென்ற புலனாய்வுத்துறையினரும், ஈ.பி.டி.பியினரும் பல்கலைக்கழக மணவர்களுக்கு தங்குமிடம் கொடுக்கக்கூடாதென வீட்டு உரிமையாளர்களை மிரட்டியுள்ளனர்.

இதனால் பல ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு தங்குமிட இன்மையால் பல்கலைக்கழகக் கல்வியைத் தொடரமுடியாத காணப்படுகிறது. அதுமட்டுமன்றி வன்னி உட்பட பிற மாவட்டங்களிலிருந்து யாழ். நோக்கி வரும் மாணவர்களை நீண்டநேரம் முகமாலையில் தடுத்து வைக்கும் இராணுவ புலனாய்வுத் துறையினர் - யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தால் சுட்டுக்கொல்வோம் என மிரட்டுகின்றனர்.

இந்த நிலையில், மாணவர்களுக்குப் பாதுகாப்பில்லாத நிலையே காணப்படுகிறது. எனவே, பல்கலைக்கழகத்தை மீள ஆரம்பிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

இந்தநிலை மாற்றப்பட்டு, பல்கலைக்கழக சூழலிலிருந்து இராணுவத்தினர் விலக்கப்பட்டு, மாணவர்கள் மீதான கெடுபிடிகள், முகமாலையில் இராணுவ புலனாய்வுத்துறையினரால் மேற்கொள்ளப்படும் மிரட்டல்கள் - விசாரணைகள் நிறுத்தப்பட்டு, பல்கலைக்கழக மாணவர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்கும் வீட்டு உரிமையாளர்களை மிரட்டும் நடவடிக்கைகளை நிறுத்தி, மாணவர்கள் அச்சமின்றித் தங்கி நின்று கல்வி கற்கக்கூடிய சூழல் உருவாக்கப்படும் வரை தொடர்ந்தும் எமது கல்விச் செயற்பாடுகளை பகிஷ்கரிக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 31.01.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.